[illegible]

[illegible] [illegible] 2

Sep 1938

3C

000211, N27 SN

M33.7.2

186931

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ. § ஸ்ரீமுக–புரட்டாதி : 1933-செப்டம்பர் § திங்கள் உ.

உள்ளுறை. பக்கம்.

| | | | |
|---|---|---|---|
| க. | விடுதல் பற்றுதல் | ... | 17 |
| உ. | ஆலயவழிபாடு | ... | 19 |
| ங. | சிவநேசன் அறிவிப்பு | ... | 20 |
| ச. | ருத்ரன் தாமஸ தேவதையா? | ... | 21 |
| ரு. | அரசன் ஆணை | ... | 24 |
| சு. | பத்தினிக்கடவுள் | ... | 25 |
| எ. | சிவபெருமான் எண்குணமுடையவர் | ... | 29 |
| அ. | கேதாரவிரதம் | ... | 32 |
| கூ. | சுக்கிரன் சிவபூசைசெய்த வரலாறு | ... | 33 |
| க0. | ஓர் வினா | ... | 34 |
| கக. | சிவத்தினியல்பு | ... | 35 |
| கஉ. | பலவான்குடி மணிவாசக சங்கத் திருவிழா | ... | 36 |
| கங. | மதிப்புரை | ... | 40 |
| கச. | திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா | ... | (25--32) |
| கரு. | இருபா விருபஃது | ... | (9—16) |

ஆசிரியர் ராம. த. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

உ

# செய்தித் திரட்டு

உள்ளூர்:— குமார விநாயகர் திருக்கோயிலில், ஆவணி கூஉ மகா சதுர்த்தி கொண்டாடப்பெற்றது. சிவாலயத்தில் பெ. அ. குடும்பத்தினரால் விநாயக மகாசதுர்த்தியன்று அபிடேக ஆராதனங்களும் திருவுலாவும் செய்யப்பெற்றன.

திருவாசக பாடசாலைக் கட்டிடத்தில் ஆவணி கஎ, கஅ-களில் மணிவாசக சங்கத்தின் உகூ-வது ஆண்டுத் திருவிழாவும், குமார விநாயகர் திருக்கோயிலில் ஆவணி யகூ-ல சதுர்த்தசி நடராஜாபிஷேகமும், ஆவணி உருல பரணிநாள் திருவாசக பாடசாலையின் ஆதி குருமூர்த்தியாகிய உயர்திரு கோவிந்த சுவாமிகளின் உக-வது குருபூசையும் நன்கு நடைபெற்றன. இம்மதி கஎல சதுர்த்தசியில் நடராஜாபிடேகம் நடைபெறும்.

நாளை வித்தியாலயங்களில் கிலுக்கு எடுப்பு விழாவும், ருல சிவாலயத்தில் நவராத்திரி பூசையும் தொடங்கி, கஉல மகாநவமியும், கநல விஜயதசமியும் கொண்டாடப்பெறும்.

திராவியன்:— வ. பழ. கடையின் சொந்தக்காரராகிய செற்குப்பை பழனியப்ப செட்டியார் கடன்காரர்களை மோசம்பண்ண வேண்டுமென்ற கெட்ட எண்ணங்கொண்டு இந்தியாவிலுள்ள சொத்துக்களைப் பேரிரவல் செய்துவைத்தும், மலேயாவில் பெருஞ் சொத்துக்களை மறைத்துவைத்தும், திராவியனில் தானுகவே கடனிறுக்க முடியாத இன்சால் வென்வி மனு தாக்கல் செய்து கணக்குகள் காட்டியதில் கணக்குகளில்மோசமிருப்பதாகக் கண்டு அவர் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார். ஒருநான்கிராட்டி யோக்கியானதால் எவரும் ஜாமீன்கொடுத்து விடுவிக்க முன்வரவில்லை. பெண்டு பிள்ளைகளிடமுள்ள பேராசையினால் அவர்கள் வாழும் பொருட்டுத் தாம் தண்டனை யடையவுந் துணிந்தார்போலும். சிவகங்கை சப்கோர்ட்டிலும் ஐ. பிக்கு இழுக்கப்பட்டிருக்கிறார். பாவம்! வயதானகாலத்தில் நன்றாக வளர்ந்த மனுஷன் திண்டாட நேர்ந்தது வினைப்பயனேயாகும்.

மேனாட்டைச் சீர்திருத்த ஸ்ரீமான் சாரதா செல்வாரா?—பிரான்ஸ் தேசத்தில் 12 வயதுள்ள பெண்ணுக்கும் 17-வயதுள்ள பையனுக்கும் விவாகம் நடைபெற்றதை ப்ரென்ஸ் பிரசிடெண்டு அங்கீகரித்திருக்கிறார். அமெரிக்காவில் நியூயார்க் என்னுமிடத்தில் 12-வயதிலும் 13-வயதிலும் சிறுமிகள் விவாகம் செய்யப்பட்டிருக்கின்றனர். 20 பையன்கள் 14-வயதிலும், 83-பெண்கள் 15-வயதிலும், ஆக மொத்தத்தில் 105 சிறுவர் சிறுமிகள் விவாகம் செய்யப்பட்டிருப்பதைக் கவனிக்குங்கால், அமெரிக்காவில் கணக்கில்லாமல் பால்யவிவாகங்கள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. ஐயோ! பாவம்! ஏன் ஸ்ரீமான் சாரதா பிரான்ஸ் அமெரிக்கா முதலிய தேசங்கள் தோறும்சென்று இந்தக்கொடிய வழக்கத்தைநிறுத்தப் பிரசாரப்ரசங்கங்கள் செய்யக் கூடாது? சீர்திருத்தக்காரர்களுக்கு எதிலும் உறுதியில்லை யன்றோ?

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| ஆண்டு எ | பலவான்குடி—ஸ்ரீமுக—புரட்டாதி | திங்கள் உ. |

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## விடுதல் பற்றுதல்.

இவ் விருமொழித் தொடர், உலக வழக்கி லுளதாயினும், சாதாரண காரியத்திலுங்கூட விடுதல் பற்றுதலில்லாதவன், விடக் கட்டத் தெரியாதவன் என்றெல்லாம் வழங்குகின்றனராயினும், அவற்றின் உண்மைக் கருத்தை நுனித்து ஆராயும் திறனுடையார் ஒருசிலரே யாகலாம். ஸ்தூலமாகப் பொருள் கொள்ளுமிடத்துத் தீதினை விடுத்து நன்மையைப் பற்றிக்கோடல் வேண்டுமென்பதே யாவரும் ஒப்ப முடிந்ததாகும். யாரா மொருவர்க்கு எது எது தீதென்று தெரிகிறதோ, அதை அதை விட்டு விலகுதல் விடுதலாகும். இதனைத் திருவள்ளுவதேவர்,

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

எனக் கூறியிருத்தல்கொண்டு தெளியலாம்.

தேகாத்மபுத்தியுடைய மக்களோ இளமை தொடுத்து உலகப் பொருளிலே அவாவி, அவ் வொவ்வொன்றையும் பற்றி நின்று, அவற்றில் இன்ப முளதாகக் கருதி பன்னெடுங்காலம் அவமே கழித்தும், பேராபத்துக்கிடையே ஒரு சிறு துளி போன்றுள்ள சிறிய இன்பத்தைத்தானே பெரிய இன்பமென் மயங்கி, ஆன்ம உணர்ச்சி யற்றவராய், துன்பங் கலவாத இன்பத்தின் தன்மை—

அதனை அடையும் வழி ஆகியவைகளை அறிந்து அடைந்து அநுபவிக்கும் வழி தெரியாமல் அகக் குருடாராய்ப் பொய்யுலக வாழ்வையே மெய்யெனக்கொண்டு விடாது பற்றி நின்று அல்லலுட்படுவர்.

ஆன்ம வுணர்ச்சி யுள்ள மகான்களே,

தன்னை யுணர்ந்திடு தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளானே.

என்னும் திருமூலதேவர் திருவாய்மலர்ந்தருளிய திருமந்திரத்தின் பொருளுணர்ந்து தன்னையும் தனக்கு ஆதாரத் தலைவனையும் ஓர்ந்து உண்டதே யுண்டு உடுத்ததே யுடுத்து அடுத்தடுத்து உரைத்ததே யுரைத்து கண்டதே கண்டு கேட்டதே கேட்டு தம் வாணாளை வீணாகக் கழிக்காது, இறந்தொழியும் சிறிய இம் மாயவாழ்க்கையைத் தீதென விடுத்து, இறவாத இன்ப வாழ்க்கையைப் பெறும் நெறிமுறை தெரிந்து தனக் குவமையில்லாத தலைவனது திருத்தாள்களையே துணையாகப் பற்றி மனக்கவலையற்று மாட்சிமிக்க நல்வாழ்வைப் பெறுவர்.

மனத்தைப் பண்படுத்தி ஆன்ம நாயகனாகிய இறைவனுறைதற்கு இடமாகத் தூய்மை செய்து, அம் மனத்தினிடத்து அன்பினால் இறைவரை இறுகப் பற்றிக்கொண்டு இன்பவாழ்வு பெறுபவர்களே மனிதராக, மனிதப்பிறவியினால் பெரும் பேறு பெற்றவர்களாக ஆவார்கள்.

இவ் வுலகவாழ்க்கையில் காதலன் காதலி யிருவரும் மனமொன்றி யுடலொன்றி யின்பம் நுகருமாறுபோல, ஆன்மாவும் தன்னை மறந்து ஆன்ம நாயகனாகிய தலைவன் வசப்பட்டு அவனைக் கலந்து அநுபவிக்கும் நெறியையே பற்ற வேண்டியதாகும்.

விடவேண்டியதாகிய விடய வாதனைகளை விட்டு, பற்ற வேண்டியதாகிய இறைவன் பாதங்களைப் பற்றவேண்டுமென்பதே முடிந்த முடிபாகையால், இம் முறையைப் பல்லூழிகாலம் பயின்று, பரமன் திருவருளால் நல்லறிவு வரப்பெற்று, உற்றவரும் உறுதுணையும் அவரேயாகப் பற்றி வாழ்வோமாக!

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

திருவள்ளுவர்.

உ

# ஆலயவழிபாடு.

உலக வாஞ்சையிற் கிடந்துழலும் மக்கள் உய்யும் பொருட்டே, மேலோர்களால் ஆலய வழிபாடு நிலை நிறுத்தலாயிற்று. ஆலயவழிபாட்டினால் நிலையாதலையும் நெஞ்சும் நிலைபெறும். செயற்கருஞ் செயல்கள் பல செய்யினும், சிந்தையை யடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது எனத் தாயுமானார் சாற்றினார். ஆதலால், மனம் பாசத்திற் பதியாது, பதியின்பாற் பதியும்படி அன்பிற்றோய்வதற்கு ஆலயவழிபாடே சிறந்ததாகும். ஆலயஞ் செல்ல எண்ணும் போதும், செல்லும்போதும், வழிபாடு செய்யும்போதும் கடவுள் நினைவே குடிகொள்ளுகிறது. மனம் பிறநெறியிற் செல்லாது காத்தற் பொருட்டே ஆலய வழிபாடும், அவ்வழிபாடு புரியுங்கால் மேற்கொள்ள வேண்டிய வரையறைகளும் வகுக்கப் பெற்றுள்ளன. அவைகள் சிரவணம் மனனம் தியானம் செபம் தோத்திரம் ஆதியனவாகும். தெய்வபரமாக இம் முறையில் மனம் ஈடுபடுதலாலேயே ஒன்றி நிலைபெறும்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்
ஆரூரா! என்றென்றே அலறா நில்லே."

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் கட்டளையிட்டருளிய தேவாரத் திருவாக்கின்படி நெஞ்சம் நிலைபெறுதற்கு நித்தலும் எம்பிரான் ஆலயஞ் சென்று வழிபாடு புரிதலே சாலச் சிறந்ததென்பது ஒருதலை.

ஆலய வழிபாட்டின் பயனாகத் தெய்வசிந்தனை சிறந்து, எவ்விடத்தும் காண்பன கேட்பனவாதிய வெல்லாம் திருவருள் மயமாகவே கண்டு கேட்டு இன்புறுதற்கு ஏதுவாகின்றது.

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி

நெருநலையா யின்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே.

என்றாங்கு எல்லாஞ் சிவமயமாகக் கண்டு, சிவமே பொருளெனக் கொண்டு தெளியும் பெற்றியும் பெறலாகும்.

இவ் வாலய வழிபாட்டின் அருமை யறியாது வறிதே காலங் கழிப்பவர்கள்,

பேதைமை யென்னும் வித்திற் பிறந்துபின் வினைக ளென்னும்
வேதனை மரங்க ளேறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட் டவலம் பூத்து
மாதுய ரிடும்பை காய்த்து மரணமே கனிந்து நிற்கும்.

என்னும் திருத்தக்க தேவர் திருவாக்குக்கு இலக்காவர்.

ஆலய வழிபாடே சாலச் சிறந்த தென்பதை,

ஆமாறுன் றிருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயிற் றூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானேன்.

என ஸ்ரீமத் மாணிக்கவாசகப் பெருந்தகையாரின் திருவாசகமும் பிறவும் வலியுறுத்தாநிற்கும்.

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ?

என்னும் திருவாக்கைப் பெருவாக்காகக் கொண்டு, ஆலயஞ் சூழ்ந்து அவன்பணி புரிந்து வழிபாடாற்றி ஆண்டவன் அருளைப் பெற்று பெறற்கரும் பெருவாழ்வு பெறுவோமாக!

'ஆலயந் தொழுவது சாலவு நன்று'

(ஔவையார்.)

நாகாசல ஆலயநேசன்.

---

# சிவநேசன் அறிவிப்பு.

நமது பத்திரிகையின் பழய பிரதிகள் வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு அணா மூன்று நேரிலும், அணா நான்கு தபால் மூலமும் தந்து பெறுவார்களாக!

அமைச்சர்.

---

உ

# ருத்ரன் தாமஸ தேவதையா?

(பொன்னேரி பிரமஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாசஐயங்கார் அவர்கள்.)

வேதம் 'ஸ்த்வோத் ரிக்தவ்யக்தாக் யாவரண சக்தி ராஸீத் | தத்ப்ரதிபிம்பம் யத்ததீச்வர சைதன்ய மாஸீத் | ......ஈசாதிஷ்டிதாவர சக்திதோ ரஜோத்ரிக்தா மஹதாக்யா விக்ஷேப சக்தி ராஸீத் | தத் ப்ரதிபிம்பிதம் | யத்தத் திரண்யகர்ப்ப சைதந்யமாஸீத் | ...... ஹிரண்யகர்ப்பாதிஷ்டித விக்ஷேப சக்திதஸ் தமோத்ரிக் தாஹங்காராபிதா ஸ்தூல சக்தி ராஸீத் | தத்ப்ரதி பிம்பிதம் யத்தத்விராட் சைதந்யமாஸீத் | ஸததபிமாநீ ஸ்பஷ்டவபுஸ் ஸர்வ ஸ்தூல பாலகோ விஷ்ணு: ப்ரதாந புருஷோபவதி |' (சத்துவாதிக்கிய முள்ள அவ்வியத்தமெனும் ஆவரண சக்தியிற் பிரதிபலித்த தெதுவோ, அஃது ஈசுரசைதன்யமாம்...........ஈசுர ஸ்வாதீனமாயிருக்கும் ஆவரண சக்தியினின்று ரஜோகுணப் பிரதான மகத்தெனும் விக்ஷேப சக்தி தோன்றிற்று. அதனிற் பிரதிபலித்ததெதுவோ அது ஹிரண்யகர்ப்ப சைதன்யமாம்........ இச்சைதன்ய ஹிரண்யகர்ப்ப னிடத்துள்ள விக்ஷேபசக்தியினின்று தமோகுணப் பிரதான அஹங்கார ஸ்தூலசக்தி யுண்டாயிற்று. அதனிற் பிரதிபலித்ததெதுவோ அது விராட் சைதன்யமாம். அஃது அவ்வஹங்காரத்திற்கு அபிமானியாகி வெளிப்படையான உடம்பினதாய்ச் சகல ஸ்தூலத்தையும் இரக்ஷிக்கும் பிரதான புருஷனெனும் விஷ்ணுவாகிறது) என்றுகூறி ருத்ரன் ஸாத்வீகி, பிரமன் ராஜஸி, விஷ்ணு தாமஸி யென்றது. அப்படியே பிரமன் ராஜஸி, விஷ்ணு ஸாத்வீகி, ருத்ரன் தாமஸி யென்னும் வேத வசனமும் உண்டு. வேதோபப்ருமமணமாகிய ஸூதஸம்ஹிதை,

'எல்லா வற்றி னும்பிரம மென்னு மதியே விசேடமாம்
நல்லார் புகழு முருத்திரற்கு நகுமுள் ளேசத் துவகுணமும்
மல்லார் வெளியே தமோகுணமு மாயற் குள்ளே தமோகுணமும்
வில்லார்வெளிச்சத்துவகுணமுமுள்ளவென்பார்மெய்யுணர்ந்தோர்'

என்றுரைத்து அவ் விரண்டனையும் ஸமன்வயப்படுத்தினது. எப்படியெனில், ஒவ்வொரு மூர்த்திக்கும் உள் என்றும் புறம் என்றும் இரண்டுநிலைகள் உள்ளன. உள்ளாவது அவ்வம்மூர்த்தியின் சொந்தநிலை. புறமாவது உத்யோகநிலை. உத்யோகநிலையில் விஷ்ணு ஸாத்வீகியும் ருத்ரன் தாமஸியுமாவராயினும், சொந்தநிலையில் விஷ்ணு தாமஸியும் ருத்ரன் ஸாத்வீகியுமே யாவர். பிரமன் இருநிலைக

ளிலும் ராஜஸிதான். 'உள்ளும் புறமு மிராசதமே யுளது மலர்மேயவற்கு' என்பது காண்க. வைஷ்ணவராய்ப் பிறந்து சைவராய் மாறிய காளமேகனா ரென்னும் பிராமணோத்தமர் 'நெடுந்துயில்வஞ்சஞ்சோம்பு நீதிவழு பேருண், கடுங்கோபம் பொய்ம்மறதி காமம்—உடலங், கரியநிறங் கள்ளங் கலந்திருத்த லாலே, யரிதா மத குணத்தனாம்.', 'பொறைஞானம் வாய்மை பொறியடக்கன் மேன்மை, நிறைமோனம் வெண்மை நிறமே—பெறுஞ்சுத்த, சத்துவத்தின் மெய்ப்பொருளாய்த் தானே சுயம்பதனால், சத்வகுணன் சங்கரனே தான்.' என்றறைந்து ஸ்திதிநீங்கிய விஷ்ணுவையும், ஸம்ஹார நீங்கிய ருத்ரனையும் படமெடுத்தனர். இக்காலக் காமகோடி பீடச் சங்கராசாரியருந் தமது தஞ்சைப் பிரசங்கத்தில் (3–8–1933 சுதேசமித்திரன்) "ஒரு விளக்கு சிவப்பு, வெண்மை, கறுப்பு ஆகிய மூன்று நிறமுள்ள கண்ணாடிகளால் பக்கத்தில் மறைக்கப்பட்டு நமது கண்ணுக்குப்பட்டால் வெளிச்சத்தை ஆங்காங்கிருந்து பார்க்கிறவர்கள் இந்த மூன்று பேதமுள்ள வர்ணங்களிருப்பதாக அபிப்பிராயப்படுவது சகஜமே. அதுபோலவே மூலகாரணமான வெளிச்சம் நமது வர்ணனைக்குப் பாத்திரமானது. இம் மும்மூர்த்திகளும் கண்ணாடியின் துவாரா வரும் வெளிச்சத்திற்கு ஒப்பானவர்கள். இதையே 'அஜாம் ஏகாம்' என்கிற சுருதி சொல்லுகிறது. அந்த வெள்ளைநிறக் கண்ணாடி தரும் வெளிச்சத்தில் ஒரு விசேஷம் உண்டு. அதற்கும் உள் வெளிச்சத்திற்கும் வித்தியாசம் கிடையாது. அதாவது, பரமசிவஸ்வரூபம் துரியஸ்வரூபம் இந்த இரண்டுக்கும் பேதமில்லாம லிருக்கிறது. இது காரணத்தாலே ஸவுந்தரிய லகிரியில் சிலவேளை பரமசிவனை மும்மூர்த்தியில் ஒன்றாகவும், துரிய சிவமாகவும், இருவிதமாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது." என்று சிவப்புக் கண்ணாடியைப் பிரமனுக்கும், கறுப்புக் கண்ணாடியை விஷ்ணுவுக்கும், வெள்ளைக் கண்ணாடியை ருத்ரனுக்கும் உவமை காட்டியுள்ளார். சிவப்பு ராஜஸ குணம், கறுப்புத் தாமஸ குணம், வெள்ளை ஸத்வ குணம்.

சிருஷ்டியாவது உயிர்கள்பொருட்டு மாயையிலிருந்து தநுகரண புவன போகங்களைக் காரியப்படுத்தி வெளியிடுதலாம். ஸ்திதியாவது உயிர்கள்பொருட்டு அத் தநுகரண புவன போகங்களை யழியாமல் நிறுத்திவைத்தலாம். ஸம்ஹாரமாவது உயிர்கள்பொருட்டு அத் தநுகரண புவன போகங்களைக் காரணமாகிய மாயையிலொடுக்கி மறைத்து விடுதலாம். இம் மூன்று தொழில்களும் மூர்த்தித் திரயாதீதராகிய ஸ்ரீ சிவபிரானாருக்கே சொந்தம். ஆகலின் அறிஞரெல்லாம் அவைகளை மதிக்கவேண்டும். பிரம விஷ்ணு ருத்ரர்கள் அப் பிரானாரை நோக்கித் தவங் கிடந்து அவ் வுத்தியோகங்களைப் பெற்று வகிக்கலாயினர். இன்னும், சிருஷ்டியாவது ஒருவன் தலையில் உலக பந்தத்தை யேற்றிவைக்கும். ஸ்திதியாவது



அதனைப் பிடித்துக்கொள்ளும். ஸம்ஹாரமாவது அதனைக் கீழே விழத் தட்டும். அங்ஙனமாயின் ஆன்மாக்களுக்குச் சுகமளிப்பது சிருஷ்டியா? ஸ்திதியா? ஸம்ஹாரமா? ஸம்ஹாரமேயாகும். மற்றிரண்டுந் துன்பமே தரும். ஆகவே, அவ்வத் தொழில்கள் அவ்வம் மூர்த்திகட்கே யுரியனவென வைத்துக்கொண்டாலும் பிராகிருதருக்கே உலகவாசையால் விஷ்ணுபாசனை வேண்டும். இவ்வாறு பயப்பாடு பற்றியும் ஸம்ஹாரந் தள்ளப்படாமை காண்க.

பின்னைச் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை முறையே ராஜஸ ஸத்வ தாமஸங்க ளென்ப தென்னையோவெனில், அவ் வினைகள் தத்தம் வினைமுதல்களையும் பயப்பாடுகளையும் நீங்கித் தம்மளவில் நின்ற வாறுபற்றி அங்ஙனங் கூறப்பட்டன வென்க.

தாமஸத் தொழில் லோகோபகாரமாக வேண்டுமாயின் அத் தொழிலை வகிக்கும் அதிகாரி தன் சொந்த நிலையில் ஸாத்விகியாகவே யிருக்கவேண்டும். அவனுந் தாமஸியா யமைந்தால் அத்தொழில் துர்விநியோகமாகி, அதிகாரங் கொடுத்த கர்த்தாவின் நோக்கமுங் கெடும். இவ் வுண்மையை யறியவல்லார்க்கு ருத்ரனது ஸாத்விகம் விளங்காமற் போகாது. ஆகலினன்றோ, பிரம விஷ்ணுக்களுக்குமே அவன் அதிகாரியெனச் சுருதி சொல்லலாயிற்று. அவன் செய்யும் ஸம்ஹாரத்தில் அவ் விருவரது தநு கரண புவன போகங்களு மடங்குவ தறிக. ஆனால், ஸத்வத் தொழிலை வகிப்பவன் தன் சொந்த நிலையிலும் ஸாத்விகியாகவே யிருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. அத் தொழிலே அவனுக்குக் கட்டுப்பாடாய் நிற்கும். ஓரொருகால், அவன் தன் னியற்கைக் குணத்தால் அக்கிரமம் புரிவானாயின், மேலதிகாரி அவனைத் தண்டித்து வரைநிறுத்துவான். விஷ்ணு பத்தவதார மெடுத்தான். அது சிவாஞ்ஞை. பத்திலும் ஸ்திதியுத்யோகம் நடந்தது. ஆனால், மச்சம், கூர்மம், வராஹம், ஸிம்ஹம், வாமனம் என்னும் ஐந்திலும் ஸ்திதிக்குப் பின் அவன் லோகத்தை ஹிம்ஸிக்கத் தொடங்கினான். அதுவே அவனது சொந்த குணமாகிய தாமஸத் தொழில். மேலதிகாரியாகிய ருத்ரன் அவ் வைந்தையும் நிக்ரஹம்பண்ணி அவனை வரைநிறுத்தினான். அந் நிக்ரஹ சரிதம் புராணத்தில் மட்டுமன்று; வேதத்திலுமுண்டு. "யோமத்ஸ்ய கூர்ம வராஹ ஸிம்ஹான் விஷ்ணும் க்ரமந் தம் வாமந மாதிதேவ: | விவிக்லபம் பீட்யமானம்" (மச்சம் கூர்மம் வராகம் சிங்கம் வாமனம் என்னுமிவற்றை வாட்டிப் பீடிக்கின்றவர்.) என்று சுருதி ருத்ரனைப் புகழ்வது காண்க.

ஆனால், சில மந்திகள் ஸம்ஹாரமென்ற சொல்லுக்குக் கொலையெனப் பொருள்பண்ணி "ருத்ரன் எல்லா வுயிர்களையுங் கொல்லுகிறான். ஆகலின், அவன் தாமஸ தேவதை. சாதுக்கள் அவனை யுபா

ஸிக்கக் கூடாது." என்றும், ஸ்திதி யென்ற சொல்லுக்கு இன்பமளித்தலெனப் பொருள்பண்ணி "விஷ்ணு எல்லா வுயிர்கட்கும் இன்பமளிக்கிறான். ஆகலின், அவன் ஸாத்வீக தேவதை. அவனையே சாதுக்கள் உபாஸிக்கவேண்டும்." என்றும் விளம்பரமடிக்கின்றனர். ஸம்ஹாரமென்ற சொல்லுக்குத் திரும்ப வாங்குதலென்றே பொருள். திரும்ப வாங்குதலாவது காரியப் பிரபஞ்சத்தை மீளவுங் காரணமாயையி லொடுக்குதலாம். அது கொலையாகுமா? ஸ்திதியாவது காரியப் பிரபஞ்சத்தை அப்படியே நிறுத்திவைத்தலாம். அதுதான் இன்பக் கொடையோ? தேவர்களுக்குள் கொலை செய்பவன் எமன். அவன்றொழிலை ருத்ரன்மே லாரோபித்து ருத்ரன் தாமஸ தேவதை யென்பது பிராந்திஞானமாம். நல்லறிவு அவனைப் பரம ஸாத்வீக மூர்த்தியென்றே கொள்ளும்.

---

# அரசன் ஆணை.

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். (திருவள்ளுவர்)

நீதிமுறை தவறாது செங்கோல் செலுத்திக் குடிகளைக் காக்கும் அரசன் அக் குடிகளுக்குத் தெய்வமாக எண்ணப்படுவன். கடவுள், யானை முதல் எறும்பு ஈருகவுள்ள எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதமான சகல ஜீவராசிகளையும் அததற்குத் தக்க வுணவும் இடமும் செயலு மளித்து, ஒவ்வோ ராத்துமாவிலுந் தானே கலந்திருந்து குறைவின்றிக் காப்பாற்றி வருகிறதைப்போல், நட்பினர், பகைவர், உறவினர், அயலார், உயர்ந்தோர், இழிந்தோ ரென்னும் பேதமின்றித் தன்னுடைய அரசாட்சிக் குட்பட்ட சகல ஜனங்கட்கும் வேண்டிய வுதவி செய்து, ஒவ்வொருவரையும் தன்னைப் போலவே பாவித்துப் பழிபாவங்கட் கஞ்சிச் செங்கோல் செலுத்துவோன் எவனோ அவனே அரசனாவன்.

குடிகளின் க்ஷேமமே பொருளாகக் கொண்டு மிருக பயம், துஷ்டர் பயம், சோரர் பயம், பகைவர் பயம் முதலிய எவ்வித பயங்களையும் ஒழித்து, துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் புரியும் அரசனைத் தெய்வமாகப் போற்றி வழிபடல் வேண்டும். "சக்கர நெறி நில்" "கொற்றவனோ டெதிர்மாறு பேசவேண்டாம்" "வேந்தன் சீறி னுந்துணை யில்லை" என்னும் கட்டளைகளைக் கடத்தலாகா.

நல். கண்ணப்ப முதலியார்,
திருவல்லிக்கேணி.

---



# பத்தினிக் கடவுள்.

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

(திங்கள்-க: கஉ-ம் பக்கத் தொடர்ச்சி.)

அன்று அந் நகரிற் றங்கி, மறுநாள் புறப்பட்டுச் சிறிது தூரம் நடந்து இளைப்பாறும்பொருட்டு ஓரிடத்தில் இருக்க, அங்கு மாதவியால் அனுப்பப்பெற்று அவள் ஓலையுடன் வந்த கௌசிகனால் தன் பிரிவாற்றாது தாய் தந்தையர்களும் மாதவியும் படுந் துன்பத்தை யறிந்து, தான் வந்ததற்குக் காரணத்தையும் தன் வந்தனத்தையும், தாய்தந்தையர்களுக்குத் தெரிவிக்கும்படி சொல்லியனுப்பி, மறுபடியும் புறப்பட்டு மதுரையை யடைந்து மதிற்புறத்தில் தங்கியிருந்தனர். கோவலன் மற்றைநாட் காலையில் எழுந்து, கவுந்தியை வணங்கிக் கண்ணகியை அவள்பால் விடுத்து, மதுரை நகர் சென்று, நகர்வளங்களைக் கண்டு மீண்டு கவுந்தியையடைந்து, தனது நட்பாளனாகிய "மாடலன்" என்னும் அந்தணனுடன் வார்த்தையாடி, அவர்களைப் பிரிந்து, அதுகாலை அங்குவந்த "மாதரி" என்னும் இடைச்சியைக்கண்டு, அவளது நல்லொழுக்கத்தைத நோக்கி, கண்ணகியை அவளிடம் ஒப்புவிக்க, அவளும் ஏற்றுக் கண்ணகியையும் கோவலனையும் அழைத்துக்கொண்டு ஆயர்பாடிக்குச் சென்று, அவ் விருவருக்கும் வீடொன்றுதவி, தன்மகள் "ஐயை" என்பவளையும் துணையாக அனுப்பி, சமையலுக்கு வேண்டுஞ் சாமானுங் கொடுத்தனள். பெற்ற கண்ணகி, பக்குவமாகச் சமைத்துக் கோவலனுக்கு இட்டுத் தானும் உண்டனள். கோவலன் இனிதாக வுண்டு மனைவியை யழைத்து, "மங்காய்! நின் கால்கள் துன்பப்பட இப் பாலைவனத்தில் நாம் நடந்து வந்ததை யறிந்த நம் தாய்தந்தையர் என்ன துன்பமுற்றார்களோ!" என்று பலவாறிரங்கி,

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வீ!"

186931

உன்னுடைய சிலம்புகளில் ஒன்றை யான் கொண்டுபோய் விற்றுவருகிறேனென்று சொல்லி, தன் கண்களிலிருந்து வழிந்த நீரைக் கண்ணகி அறிந்தால் வருத்தமுறுவாளென நினைத்து அதனை வெளிக்காட்டாது புறப்பட்டனன்.

நகருக்குச்சென்ற கோவலன் கடைவீதியில் பொற்கொல்லர் நூற்றுவர் பின்தொடர்ந்துவர, முன்வந்த தலைவனைக்கண்டு, "இவன் பாண்டியனாற் பெயர்பெற்றவனா யிருப்பான்போலும்" என நினைத்து அவனை யணுகி, "பாண்டியன் மனைவி அணியத்தகுந்த சிலம்பொன்றை விலைமதிக்கத் தகுதியுடையையோ வென்ன, கொல்லன் விலைமதிக்க அடியேனறியேனாயினும் பாண்டியனுடைய கிரீடம் முதலியவைகளை அமைக்க எனக்கு வன்மை

யுண்டு. இச் சிலம்போ, எங்கள் அரசியாகிய கோப்பெருந்தேவி அணியத் தகுதியுடையதே யன்றி மற்றவர்கள் அணியத் தகுதியுடையதன்று. ஆகலின், யான் சென்று இதை அரசனிடம் காட்டி வருமளவும் என் வீட்டிற்குப் பக்கத்திலே யிருமென்று சொல்லி, சிலம்பைக் கைக்கொண்டு தான் முன் அரசியின் சிலம்புகளு ளொன்றை வஞ்சித்துத் திருடிக்கொண்டவனாகையாலும், உருவத்தில் தான் திருடிக்கொண்ட சிலம்பைக் கோவலன் கொடுத்த சிலம்பு ஒத்திருந்தபடியாலும், இப் புதிய சிலம்பை அரசனுக்குக் காட்டி, கோவலனைக் கள்வனெனக் கூறித் தண்டனையடையச் செய்யலாமென்ற கருத்துடன் அரசனிடம் ஏகி, அரசே! தங்கள் தேவியின் சிலம்புகளிலொன்றை கன்னகமின்றியும் கவைக்கோலின்றியும், துன்னிய மந்திரம் துணையெனக்கொண்டு, வாயிலாளரை மயக்குதுயி லுறுத்துக் கவர்ந்து சென்ற கள்வன் என் வீட்டண்டை நிற்கின்றானெனக் கூறினன். கேட்ட அரசன், காமவயப்பட்டுக் காதலியகத்திற் கேகும் அவசரத்தில் ஒன்றையும் ஆராயாதவனாகி ஏவலாளரை அழைத்து, "நம் மனைவியின் சிலம்பு இவன் சொல்லும் கள்வனிடம் இருக்குமாயின், அவனைக் கொன்று அச் சிலம்பைக் கொண்டுவாருங்கள்" எனக் கட்டளை யிட்டனன். என்னே! காமத்தியற்கை! இதனாலன்றோ,

"தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனா
நாம மில்லை நரகமு மில்லையே" எனக் கம்பரும்,

"தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண் டாமோ?"

எனப் பரஞ்சோதியாரும் அருளியிருக்கின்றனர்.

கொல்லன் நினைத்த காரியம் நிறைவேறிற்றென்ற களிப்புடையோனாய், ஏவலாளரை அழைத்துக்கொண்டு தன் வீட்டண்டை சென்று, ஆங்கிருந்த கோவலனை அவர்களுக்குக் காட்டி, "இக் கள்வனே சிலம்பு திருடியவன்" எனக்கூறினன். ஏவலாளர், "கள்வனுக்குரிய இலக்கணமொன்றும் இவனிடத்துக் காண்கின்றிலமே" எனக்கூற, கொல்லன், "இவன் வலியை யழித்துத் தப்புவதன்றி இவன் மருந்திற்பட்டீராயின், நம் பெரிய புகழை யுடைய வேந்தனால் வருந்தண்டம் இப்பொழுதே பட்டீரன்றோ" என்றான்.

அதைக்கேட்ட காவலாளருள் ஒருவன், கொலையஞ்சானாகிக் கோவலனை உடனே வெட்டி வீழ்த்தினன். அந்தோ! "நுண்ணிய கருமமு மெண்ணித் துணி" என்ற ஔவையார் வாக்கைக் கடைப்பிடியாது, பெண்மயல் தலைக்கேறியிருந்தகாலை யிட்ட கட்டளையன்றோ, பரம்பரைச் செங்கோல் பண்புடனாற்றிய பாண்டிய மன்னர் செங்கோல் கெடவும், நிரபராதியாகிய கோவலன் வெட்டுண்டு வீழவும் நேர்ந்தது. இஃதிவ்வாறாக:

இடையர்சேரியில் ஆய்ச்சியர் ஒவ்வொருவரும் பாண்டியனது கோயிலுக்கு நெய்யளந்து கொடுக்கும் முறையில், மாதரியின் முறைவர, அவள் தன் மகளை அழைத்துக் கடைகயிறும் மத்தும் கொண்டு தயிர்த்தாழியிருக்குமிடஞ் சென்று பார்க்க, பிரையிட்ட தாழிகளில் தயிர் உறையாதிருக்கவும், அங்ஙனம் உறையாதிருந்ததனாலே, முதனாள் வெண்ணெயை எடுத்து உருக்க அது உருகாதிருக்கவும், ஆங்காங்கே பசுநிரைகள் சரீரம் நடுங்கிச் சப்திக்கவும் கண்டு, ஏதேனும் தீங்குவருமென்று நினைத்து, "கோபாலனை வழிபட்டுக்--கண்ணகிபார்த்துக் களிக்க--நம்முடைய பசுக்கள் நன்மையுறக் குரவைக்கூத்தாடுவோம்" எனக் கூறினள். தோழிகளுடன் குரவைக் கூத்தாடி, முடிவில் நீராடுதற்கு வைகையாற்றிற்குச் சென்றாள். அப்பொழுது கண்ணகி, சிலம்பு திருடினானென்று கோவலன் குற்றஞ்சாட்டப்பட்டு, அரசனால் மரணதண்டனை யடைந்து, ஏவலாளராற் கொல்லப்பட்டானென்ற செய்தி கேட்டு மிகவுந் துக்கித்து,

"பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கண் முகிலொடுஞ் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப வழுதாடன் கேள்வனை
யெங்கணா வென்னா வினைந்தேங்கி மாழ்குவாள்"

என்ன செய்தும் என்ன பயன்! ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு, மாண்டார் வருவரோ! பின்பு கண்ணகி, சூரியனை நோக்கி "செங்கதிர்ச் செல்வ! நீ யறிய என் கணவன் கள்வனோ?" எனக் கேட்டனள். அதுபோழ்து "கள்வனோ வல்லன் கருங்கண் மாதராய், ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்". அசரீரி கேட்ட ஆயிழை, தன்னிடத்திருந்த மற்றொரு சிலம்பைக் கைக்கொண்டு, தான் கண்ட தீக்கனாப் பலித்ததென்று வருந்தி, அரண்மனை சென்று வழக்குரைக்க நினைத்து, வீதிவழியே சென்று ஆங்குள்ள மகளிர்பால் "என் கணவனைக் கண்டு அவனிடம் பேசாதொழியேன்" எனச் சபதங் கூறி, கோவலன் வெட்டுண்டு கிடந்த இடஞ்சென்று, வருத்தமொழிகள் பல சொல்லி அவனுடம்பைத் தழுவிக்கொள்ள அவன் உயிர்பெற்றெழுந்து "நிறைமதி வாண்முகங் கன்றியதே" என்று அவள் கண்ணீரை மாற்றிச் சுவர்க்கம் புகுந்தனன். இதுநிற்க:

பாண்டியன் மனைவியாகிய கோப்பெருந்தேவி, தான் கண்ட தீக்கனாக்களை அரசனிடஞ் சொல்ல, அரசன் அவைகளைக் கேட்டுக்கொண்டு சிங்காதனத் திருந்தனன். இங்ஙன மிருந்தானிடத்தில் வாயிற்காவலாளன் வந்து,

"செற்றனள் போலுஞ் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே"

எனக் கூறினன். கேட்ட அரசன் "அவளை அழைத்து வருவாயாக" எனக் கட்டளை யிட்டனன். உடனே கண்ணகி வந்து மிகுந்த வீராவேசத்துடன்,

"புகாரென் பதியே யவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி
நின்பால்,

கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே"

எனக் கூறினள். அரசன், "பெண்ணணங்கே! கள்வனைக் கோறல் கடுங்கோலன்று, வெள்வேற்கொற்றங்காண்" எனக் கூறக்கேட்ட கண்ணகி, என்னுடைய சிலம்பின் பரல் இரத்தினம்" என்றாள். அரசன், தன் மனைவியின் சிலம்பின் பரல் "முத்து" என்று சொல்லிக் கோவலனிடமிருந்து கிடைத்த சிலம்பைக் கொணர்ந்துவைக்க அதனை உடைத்தனள் கண்ணகி. உடைக்கவே, அதினின்றும் மாணிக்கப்பரல் தெறித்தது. பார்த்த அரசன்,

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ"என நினைத்து,

"பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுள்"

என மயங்கி வீழ்ந்து, அக்கணமே உயிர்விட்டனன். அதுகண்ட அரசன் மனைவியாகிய கோப்பெருந்தேவியும், தன்னுயிர்கொண்டவன் உயிர்தேடினள்போல் ஒருங்குடன் மாய்ந்தனள்.

உடனே, கண்ணகி யான் பத்தினியேயாகில் இம் மதுரைநகரை எரிக்கிரை யாக்குவேனென்று வஞ்சினங் கூறி, தனது இடது முலையைக் கையாற் றிருகி நகரில் எறிந்தனள். எறியவே, அக்கினிதேவன் பார்ப்பனக் கோலத்தோடு வந்து. கற்புடைப் பெண்ணே! நினக்குப் பிழைசெய்த காலத்து இவ்வூரை அழித்தல்வேண்டுமென்னு மேவலை முன்னாளிலேயே பெற்றுளேன். ஆகலின், இப்பொழுது யாரை அழித்தல் வேண்டுமெனக் கேட்க,

"பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க"

எனக் கட்டளையிட்டனள். உடனே நகர முழுதும் நெருப்புப்பற்றியெரியத் தொடங்கிற்று. எரியின் வெம்மைக்கு ஆற்றாது, அந் நகர்த் தெய்வம், கண்ணகியினிடம்வந்து, "உலகம் போற்றுநல் லுத்தமப் பத்தினி! யான் இந்நகர்த்தெய்வம். முன்னாளிடையே யிந்நாடாண்ட பாண்டியர்களும் இந் நெடுஞ் செழியனும் நெறிவழுதாத நீதியை உடையவர். ஆயினும், நினக்கு இவ்வாறு துன்பம் வந்ததற்குக் காரணம் சொல்லுவேன்:—

முன்பு, கலிங்கநாட்டுச் சிங்கபுரத் தரசனாகிய வசு என்பவனும், கபிலபுரத் தரசனாகிய குமரனென்பவனும் தம்முட் பகைகொண்டு, ஒருவரையொருவர் வெல்லக் கருதியிருந்தனர்.

(தொடரும்.)

---

உ

# சிவபெருமான் எண்குண முடையவர்.

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள்.

தன்வயத்தனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்ப முடைமை என்னு மெட்டும் சிவபெருமானுக் குரிய எண் குணங்களாம். தன்வயத்தனாதலைச் சுதந்திரத்துவம் எனவும், தூய வுடம்பினனாதலை விசுத்ததேகம் எனவும், இயற்கை யுணர்வினனாதலை நிராமயான்மா எனவும், முற்று முணர்தலைச் சர்வஞ்ஞத்துவம் எனவும், இயல்பாகவே பாசங்களி னீங்குதலை அநாதிபோதம் எனவும், பேரருளுடைமையை அலுப்த சத்தி எனவும், முடிவிலாற்ற லுடைமையை அநந்தசத்தி எனவும், வரம்பிலின்ப முடைமையைத் திருப்தி எனவுங் கூறுவர்.

இவ் வெண்குணங்களுள் இயற்கை யுணர்வினனாதலை இயல்பாகவே பாசங்களி னீங்குதலினும், தூய வுடம்பினனாதலைப் பேரருளுடைமையினும் அடக்கி ஆறெனவுங் கூறுவர். இயல்பாகவே பாசநீக்கம் உளதாயின் இயற்கையுணர் வுண்டாதலும், பேரருளுடைமை உளதாயின் ஞானத் திருமேனி யிருத்தலுங் கூடுமாறறிக.

இனி, இவ் வெண்குணங்களும் சத்து, சித்து, ஆனந்தம் என்னும் மூன்றனுள் அடங்கும். எங்ஙனமெனில், எக்காலத்தும் ஒரு தன்மைத்தா யிருக்கும் பொருள் சத்து. அதற்குத்தான் தன்வயமாந் தன்மை கூடும். ஆதலால், தன்வயம் சத்தி லடங்கும். வரம்பிலின்பம் ஆனந்தத்தி லடங்கும். ஏனை அறும் சித்தி லடங்கும். விசுத்ததேகம்—சித்துரு. ஆமயம் – மலம்; நிராமயம் – மலமில்லாமை. லுப்தம் – கொடாமை. அலுப்த சத்தி – கொடுக்குஞ் சத்தி.

இவ் வெண்குணங்களுமுடைய இறைவனைக் "குணாதீதன்—நிர்க்குணன்" என்றல் எங்ஙனம் பொருந்தும் எனின், இறைவன் மாயாரகிதனாதல், சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் மாயா குணங்களைக் கடந்த மாயாதீதர் என்பது தோன்றக் கூறியதேயன்றி ஞானமாகிய சித்தின் குணம் இல்லாதவர் எனக் கூறியதன்று. இங்ஙனமன்றி, குணாதீதன் என்பதற்கு ஞானகுண மில்லாதவன் என்பது பொருளன்று. ஞானகுண மில்லாதவனாயின் குணமில்லாத குணி இல்லை. ஆதலால், இறைவனும் இல்லை எனப்பட்டு

நிரீச்சுரவாத மாகும். அதுவன்றியும், குணமில்லாத பொருள் வெறும் பாழெனப்பட்டு, அஃது உயிர்களுக்கு அநுக்கிரகஞ் செய்யுமென்றலும் பொருந்தாததாய் முடியும். ஆதலால், இறைவன் ஞானகுண முடையரென்பதே தேற்றமாம்.

இயல்பாகவே மலத்தின் வயப்படாமையின் தன்வய முடைமையும், ஞானமே வடிவாதலின் தூய வுடம்புடைமையும், இயல்பாகவே பாசங்களி னீங்குதலின் இயற்கை யுணர்வுடைமையும், ஆன்மாக்களையும் அவற்றுக்கு வேண்டுவனவற்றையும் அறிதலின் முற்றுணர்வுடைமையும், எல்லையற்ற இன்பமுடைமையின் இயல்பாகவே பாசங்களி னீங்குதலுடைமையும், ஆன்மாக்களுக்கு எல்லையற்ற இன்பந் தந்தருளுங் கிருபையுடைமையின் பேரருளுடைமையும், ஆன்மாக்களுக்கு வேண்டியவைகளை அறிந்து, அறிந்தவாறு செய்யும் வல்லமையுடைமையின் முடிவிலாற்றலுடைமையும், அவ்வாறறிதல் தாமின்புறுதற்பொருட்டன்றி உயிர்களுக்கு இன்பஞ் செய்தற்பொருட்டாதலின் வரம்பிலின்ப முடைமையும் சிவபெருமானுக்கு இயல்பாயுள்ள குணங்களாம். சிவபெருமான் எண்குணமுடையவ ரென்பது,

சருவஞ்ஞ தாதிருத் தியனாதி போதம்
அறைசுதந் தரதா வலுத்த சத்தி
நிறையனந்த சத்தி நிராமய வான்மா
செறிவிசுத்த தேக மிவைசிவத் துவமே.

என்னுஞ் சர்வஞானோத்தரச் செய்யுளானும்,

எட்டு மூர்த்தியாய் நின்றிய லுந்தொழி
லெட்டு வான்குணத் தீசனெம் மான்றனை
யெட்டு மூர்த்தியு மெம்மிறை யெம்முளே
யெட்டு மூர்த்தியு மெம்மு ளொடுங்குமே.

என்னுந் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தானும்,

இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னானை
யிறையவனை மறையவனை யெண்குணத்தி னானை.

என்னுஞ் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரத்தானும்,

'பாவமில்லாதவர்'' (சாந்தோக்கியம்: அ, க, ரு.) எனவும்,
''சர்வஞ்ஞரும் யாவும் அறிபவரும்'' (முண்டகம்: க, க, கூ.)

எனவும் வரும் வேதசிரசுகளானும்,

ஊன்புகு மெவரை யுந்தன் னெண்குணத் தொடுக்கித் தானே
வான்புக லாகி நின்று மற்றவர் குணங்க ளூடு



தான்புக லில்லா தோனுந் தன்னிய லினைய தென்றே
யான்புக லரிய தேவு மீசனு மவனே யென்னும்.

என்னுங் கந்தபுராணம் உபதேசப்படலச் செய்யுளானும்,

நிர்க்கு ணத்தனே நிமல னன்னவன்
சிற்கு ணத்தனாய்த் திகழு வானொரு
சொற்கு ணத்தனோ தொலைக்கு நாளடு
முற்கு ணத்தினை முன்னு மாறலால்.

என்னும் அநந்தன் சாபநீங்குபடலச் செய்யுளானும் செவ்விதினுணரப்படும். சர்வஞானோத்தராகமமும் ''சிவபரம்பொருளானது பரமாயது. ஆகலின், அது மந்திராதீதமாயும், நிரஞ்சனமாயும், நிராமயமாயும், நிராதாரமாயும், நிறமிலதாயும், சர்வஞ்ஞமாயும், சர்வ வியாபகமாயும், சாந்தமாயும், சர்வான்மாவாயும், சர்வதோமுகமாயும், அதீந்திரியமாயும், நிராலப்பமாயும், அதி சூக்குமமாயும், சாசுவதமாயும், துருவமாயும், ஆறுகுண முடையதாயும், அப்பிரமேயமாயும், உவமை யில்லாததாயும், எள்ளில் எண்ணெய்போல உள்ளும் வெளியுமாயும் உள்ளது.'' என்று கூறுகின்றது.

இன்னும், எவர் சர்வஞ்ஞராய் எவற்றையும் அறிபவராய் இருக்கின்றாரோ, எவர்க்குத் தபசு ஞானமயமா யுள்ளதோ'' (முண்டகம் க, க, கூ; உ, உ, எ; மைத்தி: எ. க.) என்றற் றொடக்கத்த வேத சிரசுகளால் சிவனுக்கு சர்வஞ்ஞத்துவம் என்னும் குணமுண்மையும்,

''ஆனந்தம் பிரமம் (தைத்திரீயம் ங. சு.) அன்னியமாய் அந்தரமாயுள்ள ஆன்மா ஆனந்தமயம் (தைத் உ. ரு. க) என்னும் சுருதிகளால் நித்திய திருப்தத்துவம் என்னுங் குணமுண்மையும், வித்தை அவித்தை (பசு, பாசம்) என்னும் இரண்டையும் ஆளுபவர் மற்றொருவர் (சுவேதாசுவதர உபநிடதம் ரு. க.), பிறவாதவராகிய ஞனும் அஞ்ஞனுமா மிருவரும் முறையே ஈசனும் அநீசனுமாம் (சுவே. க. கூ.) என்னுஞ்சுருதிகளால் சுவதந்திரத்துவ குணமுடைமையும், அவரது பராசத்தியானது சுவாபாவிகமாய் ஞானசத்தி இச்சாசத்தி கிரியாசத்தி எனப் பலவாறாகக் கேட்கப்படுகின்றது (சுவே. சு. அ.) என்பதனால் அலுப்தசத்தி என்னுங் குணமுடைமையும், உருத்திரர் ஒருவர் உளர்; (அவர்) இரண்டாவதொன்றைக் கொள்வாரல்லர்; இந்த உலகம் அனைத்தையும் படைப்பனவுங் காப்பனவுமாகிய சத்திகளினாலே ஆளுகின்றனர். (சுவேத. ங. உ) என்பதனால் அனந்த சத்தி என்னுங் குணமுண்மையும் இனிது உணரப்படுகின்றன. இவ் வெண்குணங்களையே உத்தரவேதமுடையார்,

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

என்றருளிச் செய்தார்.

சர்வஞ்ஞத்துவம் முதலிய ஆறு சத்திகளாகிய ஆறு அங்கங்களினாலாய விக்கிரகமுடையர் என்று கைலாச சங்கிதை கூறுகின்றது. சோமசம்பு பத்ததி வியாக்கியானத்திலே இருதயம் சர்வஞ்ஞதையையும், சிரசு திருப்தியையும், சிகை அநாதி போதத்தையும், கவசம் சுவதந்திரத்துவத்தையும், நேத்திரம் அநந்த சத்தியையும், அஸ்திரம் அலுப்த சத்தியையும் உணர்த்தும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

இவற்றின் விரிவுகளை சர்வஞானோத்தராகமம் ஆன்மசமாமாதிப் பிரகரணத்திலும், சிவஞானசித்தியார், பிரமசூத்திர நீலகண்டபாடியம் முதலிய நூல்களிலும் கண்டுகொள்க. இவ்வாற்றால் இவ் வெண்குணங்களும் இறைவனுக்கு இன்றியமையாமை காண்க.

---

# கேதார விரதம்.

திருச்செங்கோடு சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் ஐயா அவர்கள், இவ்விரதத்தைப்புரட்டாதி கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியாகக் கொண்டு முன் துவக்கி முடிக்கவேண்டு மென்பது மறுப்புக் கிடமாகும்: ஐப்பசிமாதத்திய அமாவாசையில் கேதாரேசுவர விரதம் என விரதசூடாமணி கேதாரவிரத பூசா விதியிலும், புரட்டாதி மாத சுக்கிலபக்ஷ அஷ்டமிமுதல் அமாவாசை வரையில் கேதார விரதத்தைச் செய்யும்படி கேதாரவிரத கதையிலும், புரட்டாதிமாத சுக்கிலபக்ஷ அஷ்டமியில் துவக்கி 21 நாளாவது, விரதமுடிவு தினத்திலாவது செய்க என ஸ்காந்தம் உபதேசகாண்டம் கேதாரவிரத மகாத்மியத்திலும் கூறப்பெற்றுள்ளன. புரட்டாதி மாதத்திலே சுக்கிலபக்க அஷ்டமி முதல் 21 நாளாயினும், கிருஷ்ணபக்க பிரதமை முதல் 14 நாளாயினும், கிருஷ்ணபக்க அஷ்டமிமுதல் 7 நாளாயினும், கிருஷ்ணபக்க சதுர்த்தசியாகிய ஒருநாளாயினும், கேதார நாதரைக் குறித்து அநுஷ்டிக்கும் விரதமாம் என்று சைவ வினாவிடை விரதவியல் கூறுகிறது. இப்பிரமாணங்களைக் கொண்டு புதுக்கோட்டை சமஸ்தானப் பஞ்சாங்கத்திலும், கும்பகோணம் மடத்துப்பஞ்சாங்கத்திலும் ஐப்பசியிற் கேதார விரதம் குறித்திருக்கிறது. ஆதலால், புரட்டாதி மாதச் சுக்கிலபக்ஷத்து அஷ்டமியில் தானே தொடங்க வேண்டும். ஆவணியில் தொடங்க விதியிருப்பின் "சிவநேசன்" வாயிலாக விளக்கவேண்டுதும்.

வே. நாராயண கனபாடிகள்.
கொத்தமங்கலம்.

உ

# சுக்கிரன் சிவபூசைசெய்த வரலாறு.

மாமியார் தோாக மாமனு ரம்பாக மைத்து னன்முன்
தோமிலாப் பாகனுய்த் தொன்மதியா தித்தனே யுருளை யாகக்
காமமிலான் புரமெரித்த கடவுள்தே ரச்சிறுத்த கருணை யானும்
வாமமயிலைத்தென்பாற் செல்வவிநாயகனூர்நன் மலர்த்தாள்போற்றி.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியராயுள்ள சிவபெருமான் உயிர்கள்மீது வைத்த கைம்மாறு இல்லாத பெருங்கருணையால் திருவருளையே திருமேனியாகக் கொண்டு நங்கை பங்கராய் வீற்றிருந்தருளும் பேறு பெற்றிருப்பது திருக்கைலாய மலை. அத்தகைய தெய்வத் திருமலையில் ஓர்காலம் உமைபிராட்டியாருடன் பரமன் சரச வார்த்தைகள் ஆடிக்கொண்டிருந்தார். அவ்வமயம் ஆங்கு எரிந்துகொண்டிருந்த தீபம் அணையும் தருவாயில் இருந்தது. அது கண்ட எம் பிராட்டி 'தீபம் தூண்டி சுடர்விட்டெரியச் செய்வார்க்கு எப்பரிசு அளிப்பீர்" என்று கேட்க, "அன்புடன் தீபம் தூண்டுவார்க்கு உலகமெல்லாம் ஆளும் வரமளிப்போம்" என்று விடையிறுத்தார் விடையேறியோன்.

அச்சமயம் தினந்தோறும் தீபத்திலுள்ள நெய்யினை யுண்டு செல்லும் எலி ஒன்று வழக்கம்போல அன்று வந்து உண்ண முயற்சிக்கையில், தற்செயலாக அதன் மூக்கு வத்தியில் பட்டு அணையும் தருவாயிலிருந்த தீபம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது. உமையவளும் கண்டு மனமகிழ்ந்தாள். நாதனும் எலிக்கு நீள்புவியாள வரம் கொடுத்தனன். அக்கணமே எலி மானிட வுருக்கொண்டு மாவலி என்ற பெயர் புனைந்து தேவர் முனிவர்களையும் மற்றுமுள்ளோரையும் வென்று வாகைமாலைசூடி மானவர்களும் தானவர்களும் குற்றேவல் செய்ய அரசாட்சி செய்து வந்தான்.

ஆகவே, அவன் கொடுங்கோன்மைக்கு ஆற்றாராகி தேவர்களும் தாபதர்களும் விண்ணேறும் தண்கயிலைசென்று கறைக்கண்டனடிபணிந்து உற்ற குறையினைக் கூறி இரந்தனர். அடியார் அல்லல்தீர்க்கும் அருமருந்தாகிய சினமால்விடையான் கண்ணனை விளித்து, "மாவலி நம்பால் வரம் பெற்றவன். அன்னவனுக்கு தீங்கு இழைக்காது அவன் அரசுரிமையை வெளவி அவனைப் பாதாளம் சேர்த்து விரைவாக நீ வருக." என்று பணித்தனன். அதுகேட்ட விஷ்ணு இறைவனைப் போற்றி மாவலிபால் சென்று மூவடி மண் யாசித்தார். மாவலி அதற்குச் சம்மதித்து கொடுக்கும் முன்னம் அசுரகுரு சுக்கிரன் விண்டுவின் சூழ்ச்சியை மாவலிக்கு அறிவித்து வழங்குவதைத் தடுத்தனன். அது கேளாமல் மாவலி மூவடி மண் வழங்க விஷ்ணுவின் கரத்தில் நீரை வார்த்தான். அப்போது சுக்

கிரன் வண்டு வடிவங்கொண்டு அந் நீர் விழவொட்டாமல் அக் கலசத்துளையில் தூர்த்துக் கொண்டான். இலக்குமீபதி அச் சூழ்ச்சியை யறிந்து ஒரு துரும்புத் துண்டினால் துளையை நோக்கிக் குத்த சுக்கிரன் கண்ணிழந்து வெளியே வந்து வெருவினான். கண்ணிற் சிறந்த உறுப்பில்லையாகையால் கண்ணிழந்த சுக்கிரன் சித்தங் கலங்கினான். ஆங்கு யாழ்வல்லோராகிய நாரதன் போந்து சுக்கிரன் துயரமதறிந்து "தொண்டைநாட்டில் உமையம்மை பூசித்த திவ்விய தலமாகிய திருமயிலையிற் சென்று பரமனது பாதமேத்திப்பண்புடன் தவமியற்றுக. தேடியது அடைவாய்" என்று கூறிப்போந்தார். அங்ஙனமே திருமயிலையில் போந்து குருந்தமா நிழலில் தவச்சாலை யொன்று குயிற்றி நெடுங்காலம் கடுந்தவம் புரிந்தான்.

இந்திரன் ஏவலால் தேவதாசிகளுள் ஒருத்தியாகிய ஊர்வசி சுக்கிரன்பால் சென்று தவத்தைக் கெடுக்க முயன்றும் முடியாமையால் பொன்னகர் ஏகினள். சுக்கிரன் உறுதியைக்கண்டு மழவிடையோன் அந்தணர் கோலம் புனைந்து வெள்ளிமுன் தோன்றி 'வரமெது வேண்டும்?" என, சுக்கிரன் "நான் கள்ளம் செய்ததற்காகக் கண்ணினை இழந்தேன். பேரருள் புரிய வேண்டும்" என்று இறைஞ்சிநின்றான். அது கேட்ட பரமன் கண்ணொளி யீந்து தமது திருவுருக் கரந்தார்.

ஆகையினால், சுக்கிரன் பூஜைசெய்த காரணத்தைக்கொண்டு அதுமுதல் அப் பரமனுக்கு சுக்கிரேசர் என்றும், வெள்ளீசர் என்றும் வழங்கி மக்கள் வழிபடலாயினர். இது, திருமயிலை ஸ்ரீ வெள்ளீஸ்வரர் பிரம்மோற்சவத்தின் எட்டாநாளன்று காட்டப்படுமாறு காண்க.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே. (தேவாரம்)

திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கத்தார்.

---

## ஓர் வினா.

திருப்பனந்தாளில் சிவலிங்கம் சாய்ந்திருந்ததை நிமிர்த்திய வரலாறு பெரியபுராணத்தில் குங்கிலியக்கலய நாயனார் சரித்திரத்தில் கூறப்பெற்றுள்ளது. சாய்ந்திருந்ததற்குக் காரணம் யாண்டு கூறப்பெற்றுள்ளது? என்பதைச் சிவநேசன் மூலம் தெரிவிக்கும்படி ஆராய்ச்சியாளர்களை வேண்டுகின்றேன்.

லோ. கு. நடராஜ செட்டி.

---

# சிவத்தினியல்பு.

சுதுமலை அம்மன்கோயில்
சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.

(திங்கள் ௧: ௧௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

வியாபாரபேதம்பற்றி ஐவகைச் சத்திகளுளவெனக் கொள்ளினும் முதல்வனது சத்தி யொன்றேயாம். ஆதிசத்தி ஐந்தொழில் செய்யு மவதாரத்தில் ஆரணி, சநநி, ரோதயித்திரி என மூன்று வகையாகக் கொள்ளப்படும். அச் சத்திகள் மூன்றும் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐந்து கர்த்தாக்களை யதிட்டித்துநின்று, முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களைச் செய்யும். அச் சிவசக்தி இவர்களிடத்தே தங்கி இவர்களை அதிட்டித்து ஐந்தொழில் செய்தலால், இவர்களும் சிவ வடிவங்களாக உபசரித்துச் சொல்லப்படுவர். உண்மையில் அவர்கள் அதிட்டான வடிவங்களாம். அதிட்டானமாவது நிலைக்களமாகக் கொண்டுசெலுத்துதல். பதியின் ஆதிசத்தி ஆரணி முதலிய மூன்றாக நின்று ஐந்து கர்த்தாக்களை அதிட்டிக்குமென்று அறியத்தக்கதாம். அது எதுபோலுமெனில், அரசனுடைய ஆணையாகிய சத்தி மந்திரி முதலாகிய பலரிடத்து நின்று அவ்வப் பெயர்பெற்று அவ்வவர்க்குரிய கருமத்தை நடத்துதல்போலு மென்க.

இன்னும், முதல்வன் ஊரும் பெயரும் உருவுங் கடந்தவராயினும் உயிர்களிடத்தே வைத்த கருணையால் ஊரும் பெயருங் கொண்டருளுவர். அப்படிக் கொள்ளுமிடத்துத் தனது அருட்சத்தியினிடமாகக் கொள்வதும், மாயையினிடமாகக் கொள்வதும் என்னும் வேறுபாடுபற்றி அவை இருவகைப்படும். அருட்சத்தியினிடமாகக்கொள்ளும் வடிவங்கள் சம்புபட்சமெனப்படும். மாயையினிடமாகக்கொள்ளும் வடிவங்கள் அணுபட்சமெனப்படும். கண்ணாடியில் நிழல்போல்வது அருட்சத்தியினிடமாகத் தோன்றுவது. அது, பூசை தியானாதிகளின்பொருட்டுக் கொள்ளப்படுங் கற்பித வடிவமாம்.

சூரிய சந்நிதானத்தில் இருள் முனைத்து நில்லாதவாறுபோல சிவமென்னும் பொருளின் எதிரே மல மாயை கன்மங்கள் முனைத்து நில்லா. அதனால் 'அவை சிவத்தினால் இயக்கமுறுமென்று கொள்ளுதல் அமையாது. அதுபற்றியே சத்தியின் ஏகதேச வியாபரிப்பில் அவை தொழிற்படுமென்று வேதசிவாகமங்கள் மொழியும்.

இனி, மாயாகாரிய வடிவம் முதல்வனெதிரே அசத்தா யொழிதலின், அவ் வடிவினை முதல்வன் ஏன்று கொள்ளான். அதனால் அவை சத்தியின் அதிட்டானமாகிய அணுபட்சங்களென உண்மையுணர்தற்பாற்று.

---

உ

பலவான்குடி

# மணிவாசக சங்கத் திருவிழா.

---

திருவருளால் இச் சங்கத்தின் இருபத்து மூன்றாவதாண்டு நிறைவுத் திருவிழா, ஆவணி ௧௭, ௧௮௳ (1, 2—9—1933)களில் நன்கு நடைபெற்றது. ௧௭௳ உத்தராடநாள் குமாரவிநாயகர் திருக்கோயில் வழிபாடும், சித்திவிநாயகர் தண்டபாணியுடன் மாணிக்கவாசகர் திருவுலாவும் செய்யப்பெற்றன. பிற்பகல், பரம்பரைத் திருப்பணிச்செல்வர் வழித்தோன்றலும், மகா வித்துவசிரோமணியுமாகிய அமராவதிபுதூர் சிவநேசத் திருவாளர் வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியாரவர்களை, குமாரவிநாயகர் திருக்கோவிலிலிருந்து மேளவாத்தியங்களுடன் மாலைசூட்டி வரவேற்று, மணிவாசக சங்க மண்டபத்தில் அக்கிராசனத் தமர்த்தி, தமிழ்மறைவாணர்கள் திருப்பாசுரங்களை யின்னிசையுடன் ஓத, சிவநேசன் இராமசாமி செட்டியார் தலைவ ரவர்களைப் பாராட்டிப் பேசி, கோநகர் மகாதேவ முருகப்ப செட்டியா ரவர்களின் திருவளர்செல்வர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியாரால் வந்தனோபசாரப்பத்திரம் வாசித்துவழங்க, திருவாளர் மெ. வெ. வேலப்ப செட்டியார் இருபத்துமூன்றாவதாண்டின் அறிக்கை படிக்க, சிவநேசன் உதவியாசிரியர் திரு. உ. ரா. சுவாமிநாதபிள்ளை யவர்களின் திருவளர்செல்வன் சாமி: சிவப்பிரகாசம் செந்தமிழ்த் தெய்வவணக்கம் கூற, தலைவர் மிக வீர கர்ச்சனையுடன் அரும்பெருங் கருத்துக்கள் நிறைந்த முகவுரை கூறினர்.

மாணிக்கவாசக சுவாமிகள் மகாலங்கார வைபவத்துடன் எழுந்தருளிவர, தமிழ்மறைவாணர்களும் அடியார்குழாங்களும் தேவார திருவாசகங்களை நிரைநிரையாக இன்னிசையுடன் பாராயணஞ் செய்துவர, சிவாலயஞ் சேர்ந்து, பிரதோட விநாயகருடன் திருவீதி வலம்வந்து சிவாலயசேவை செய்து அன்பர் குழாங்கள் மாணிக்கவாசகருடன் பிள்ளையார்கூடம் வந்து, மாணிக்கவாசகப் பெருமானை ஆங்கெழுந்தருளச்செய்து, சிவநேசன் இராமசாமிசெட்டியாரின் வேண்டுதலை யுவந்து தேவகோட்டைத் திருவாளர் கரு. கி. சொர்ணநாதன்செட்டியார் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே" என்னும் திருநாவுக்கரசர் திருவாக்கைப் பொருளாகக்கொண்டு யாவர் உள்ளத்தும் நன்கு பதியும்வண்ணம் பொன்னென மணியெனச் சொன்மழை பொழிந்தனர். மேளதாள விருதுகளுடன் மாணிக்கவாசகர் தமது இருக்கைவந்து சேர்ந்தனர். ஊர்வலத்தில் வீடுகள்



தோறும் பூரணகும்பமாதிய வைத்து, தேங்காய் பழங்கள் நிவேதித்துக் கற்கண்டாதிய வழங்கிச் சிறப்புச்செய்து பேரன்புகாட்டிப் பெருமகிழ்வுற்றனர்.

௧௮௳ முற்பகல் பிற்பகல்களில், சிவநேசச் செல்வர்களான.— வடலூர் 'அருட்பிரகாசம், பத்திராதிபர் வரதராஜர்—மணிவாசகர், புதுக்கோட்டை இயற்கைஇல்லம் கி. இலக்குமணசர்மா B. A. B. L. அவர்கள்—உபவாசமகிமை, தேவகோட்டை கரு. கி. சொர்ணநாதன் செட்டியார்—ஒழுக்கம், கோநகர் கற்பக விநாயக கலாசாலை மாணவன் ராம. சண்முகம்—பாண்டித்துரைத் தேவர், ஆத்தங்குடி சு. வீர. கதிரேசச் செட்டியார்—காலநிலை, புரிசை பெருஞ்சொற்கொண்டல் சு. முருகேச முதலியார்—அப்பூதியடிகள், கோநகர் கற்பகவிநாயக கலாசாலை மாணவன் வி. திருநாவுக்கரசு—திருவாசகத் தேன், தேவகோட்டை வழக்கறிஞர் நாகரத்ந சாஸ்திரியார்—சிவோபாசனை, சென்னை அட்வகேட் T. N. சேஷாசல அய்யர்—கலைநலங் கனிந்த வாழ்க்கை, மேலைச்சிவபுரி கணேச செந்தமிழ்க் கலாசாலைத் தலைமை யாசிரியர் மு. அருணாசலம் பிள்ளை யவர்கள்—திருக்கோவையார், மகிபாலப்பதி பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியா ரவர்கள்—அறிவின்பம் என்னும் பெரும் பொருள்களை முதலாகக் கொண்டு, சொன்னயம் பொருணயமாதிய பன்னயங்களும் பொங்கித் ததும்ப இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேனென ருசிக்கும் நன்னயமான பிரசங்கமாரி பெய்து,குழுமியிருந்த அன்பர் பலர்க்கும் இன்பூட்டினர். தலைவரவர்கள் சுருங்கக் கூறல் விளங்கவைத்தல் என்னும் இலக்கண வரம்புடன் யாவர்க்கும் மனவெழுச்சி யுண்டாகும்படி ஆசியங் கலந்த வாசகங்களாற் பல மேற்கோள்கள் காட்டிக் கெம்பீரமாகத் தக்கவாறு முடிப்புரை கூறினர். கோநகர் திருவளர்செல்வர் இராமசுப்பிரமணியன் செட்டியார் தலைவரவர்களையும் சங்கத்தையும் பாராட்டி,

1. திருத்தன வணிகர் திகழ்குலஞ் செய்த
   சிறப்புறு நற்றவப் பேற்று
   லருத்தமிக் கமரா வதிபுதூ ரார்ந்த
   வண்ணலே! யருந்தமிழ்ப் புலவோய்!
   பெருத்தவான் பலவான் குடிவளர் மணிவா
   சகசங்கப் பெட்புறு தலைமை
   பொருத்தமுற் றிடக்கொள் ராமநா தப்பேர்ப்
   புனிதநீ நீடுவா ழியவே!

2. நலவான் குடியைந்து மாடுமெந் நாதனி னல்லருளாற்
   புலவான் குடிகள் விரும்பியம் பாவிற் புகழமைக்க
   வலவான் குடியினர் வாழ்த்துச் சொலப்புவி வாழியவே!
   பலவான் குடிமணி வாசக சங்கம் பயனுறவே.

என்னும் இவ் விருசெய்யுட்களையுங் கூறி, பரிமணங்குடி வித்துவான் திரு. மு. முத்துப்பிள்ளையவர்கள் இயற்றிய,

1. பூவிலயன் மான்முதலோர் போற்றுபல வான்குடிக்கண்
மேவுஞ் சிவகுமர வேழமுகத்—தேவின்
துணையடியில் வாசமலர் தூயருச்சித் தேத்திப்
பணியுமன்பர்க் குண்டாம் பலன்.

2. குமரகண நாதன் குகன்றில்லைக் கூத்தன்
உமைவாத வூர ரொடுசெங்—கமலவன்னை
தங்குபல வான்குடியைச் சார்ந்துதரி சிக்கினுறும்
புங்கவரும் போற்றும் புகழ்.

3. மணிவா சகசங் கத்தினரும்
மன்னு பலவான் குடிமருவு
கணமா தவருஞ் சைவநெறி
காட்டிச் சிவநே சம்பரப்புங்
குணவான் ராம சாமிமுதற்
கூறுந் தனவை சியர்குலமும்
அணியார் குமர கணநாத
னருளா லூழி வாழியரோ!

என்னும் இம் மூன்று செய்யுட்களையும் படித்தனர்.

வடலூர் "அருட்பிரகாசம்" பத்திராதிபர் திரு. வரதராஜன் அவர்கள்,

வாழ்வுமிக் கோங்க! வாழ்வுமிக் கோங்க!
மணிவா சகரவை வாழ்வுமிக் கோங்க!
'உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்'
இலகுபொன் னம்பலத் தெழினடம் புரிவோன்
நித்த நிமலன் நிருமல நாதன்
சத்திய மறைபுகழ் தனிப்பெருஞ் சோதி
என்றன் குருபரன் இமையவர் மற்றோர்
என்று மேத்தும் இனியநன் னகராப்
பேர்பெறும் புலவ ரெழினலம் பெருகும்
பார்புகழ் பலவான் குடிவளர் பரமன்
வாழ்வுமிக் கோங்க! வாழ்வுமிக் கோங்க!
அணிநடம் புரியும் அரனடி கலந்த
மணிவா சகனடி வாழ்வுமிக் கோங்க!
அங்கவ னருளா லவன்பெயர் புனைந்த
சங்கமெஞ் ஞான்றுஞ் சதுருட னோங்குக!
இருபத்து மூன்று ஆண்டு நிறைவின்



திருவிழாச் சிறக்கத் திருவருள் சுரக்க!
அருளினன் அன்பினன் அடியிணை யுளத்தினன்
பொருளினன் புகழினன் புண்ணியன் கல்வியன்
சீர்தரு சிவத்தி னேசனின் றலைவன்
பார்புக ழிராம சாமிநற் பெயரினன்
வாழ்வுமிக் கோங்க! வாழ்வுமிக் கோங்க!
அச்சபைத் தலைவரு மாதரிப் போர்களும்
மெச்சியங் கணைபவர் மேன்மேல்
வாழ்வுமிக் கோங்க! வாழ்வுமிக் கோங்க!!

என்னும் வாழ்த்துக் கூறினர்.

அணிமையிலிருந்தும் சேய்மையிலிருந்தும் அன்பர் குழாங்களும், அடியவர் குழாங்களும், பல பிரமுகர்களும், பிரபல ஞானவான்களும், புலவர் பெருமக்களும், தமிழ்மறைவாணர்களான.—காரைக்குடி அ. நடேச தேசிகர்—வைத்தியநாத தேசிகர், கோட்டையூர் சிவலோகநாத தேசிகர்—சோமசுந்தர தேசிகர்—சந்திரசேகர ஓதுவார், உ. சிறுவயல் தண்டபாணி தேசிகர், காளையார்மங்கலம் மீனாக்ஷிசுந்தர முதலியார்—அவரது புதல்வர்களுள் பொன்னம்பலம்—கல்யாணசுந்தரம், தேவகோட்டை மாணிக்க முதலியார், வைரவன்கோவில் கணேச ஓதுவார், கோநகர் ம. க. சரவணப்பெருமாள் ஓதுவார்—உள்ளூர் கனகசபாபதி ஓதுவார் ஆதியோர்களும், கோநகர் கற்பகவிநாயக கலாசாலை மாணவ மாணவிகளுட் சிலரும் வந்து நிரம்பியிருந்தனர்.

திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், சென்னை மறைத்திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர், சென்னை இந்துமத தர்மபரிபாலன சபைத் தலைவர் திருவாளர் T. K. சிதம்பரநாத முதலியார், "சித்தாந்தம்" பத்திராசிரியர் திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் அட்வகேட், திருவாளர் மு. சித. மு. சிதம்பரம் செட்டியார், கோநகர் மறைத்திருவாளர் S. ஆழ்வாரையங்கார், திருத்தென்குடித்திட்டை மறைத்திருவாளர் மு. பாலசுப்பிரமணிய ஐயர் முதலானவர்களிடமிருந்து வாழ்த்துக் கடிதங்கள் வந்து படிக்கப் பெற்றன. அனைவர்க்கும் "சிவநேசன்" இராமசாமி செட்டியார் மனமுவந்த வந்தனங் கூறினர். உள்ளூர் அன்பர் பலர் முன்னின் றுபசரித்தனர். மாகேசுரபூசை யாதிய மாண்புடன் நடைபெற்றன. எல்லா வகையாலும் இனிது நிறைவேறியது.

——

உ

# மதிப்புரை

---

## சுலோசனை.

இக் கற்புக்கரசியின் கதை இராமகதையின் றொடர்புடைய தென்ப தியாவரு முணர்வர். இதனை, மகிபாலப்பதி இருமொழிப் பெரும்புலவ ராகிய பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் வடமொழியிலிருந்து தென்மொழியின் மொழிபெயர்த்துத் தர, மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையார் தக்க முறையி லச்சியற்றி வெளியிட்டுள்ளார்கள். பண்டிதமணியவர்கள் நாவன்மை பாவன்மையொடு மொழிபெயர்க்கும் நடைவன்மையும் மிக்குடையா ரென்பதை யிவ்வுரைநடை நூல் நன்குவிளக்கும். ஆரியத்துக்கு நேரிய தமிழ்மொழி அமைக்கும் ஆற்றலுடையா ரென்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டா யிலங்குகின்றது. சொற்சுவை பொருட்சுவையொடு கதைச்சுவையுங் கலந்து கற்பார் மனத்தைக் கவருங் கவினுடைமையால், இஃது ஆங்கிலக் கல்லூரி மாணவருக்குப்பாடமுறையா யமையும் பான்மையுடைத் தாயிற்று. இவ்வாறே வடமொழி நூல்கள் பலவும் பண்டிதமணி யவர்கள் செவ்விய தமிழின் மொழிபெயர்த்து வெளியிடின், தமிழுலகு காலத்தினாற் செய்த நன்றி யெனப் பாராட்டுங் கடப்பாடுடையதாகும். இதன்விலை அணா 4. கிடைக்குமிடம்:—தலைவர், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை (சமஸ்தானம்.)

## திருவருட்பயன்—கொடிக்கவி.

இவ் விரண்டும், சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள், ஸ்ரீஉமாபதி சிவாசாரிய சுவாமிக ளருளியவை. இவற்றிற்குத் திருநெல்வேலிப்பேட்டை சைவத்திருவாளர் ஆ. ஈச்சுரமூர்த்திப் பிள்ளையவர்கள், பதவுரை கருத்துரைகள் விளக்கமாக எழுதித் திருந்திய முறையிற் பதிப்பித்துள்ளார்கள். இவை, பல சான்றோருரையுடன் பல பதிப்புகள் வெளிவந்திருப்பினும், இப் பதிப்பு இளைஞரும் பயின்று பயன் றுய்க்கும் எழிலுடைத்தா யிலங்குகின்றது. இதன் விலை அணா 8. கிடைக்குமிடம்:— த. ஆ. வேங்கடாசலப் பிள்ளை, மெய்கண்டான் நிலையம், திரிபுரசுந்தரி அம்மன்கோயில் மேலத்தெரு, பேட்டை, திருநெல்வேலி.

[மேற்கண்ட நூற்பிரதிகளுள் ஒவ்வொன்று எமது பார்வைக்கு அனுப்பியுதவிய ஆசிரியர்கட்கு எமது நன்றி யென்றும் உரியதாகுக! ப—ர்]

---



74. வாட்டமிலன் பர்க்குமுத்தி மாக்கள் பிடிக்குவயற்
காட்டிக் களிக்குங் கழுக்குன்றே—நாட்டமுறும்
யோகத்தா ரத்த ருவகை பெருகுமிடப்
பாகத்தா ரத்தர் பதி.

(கு - பு.) அன்பர்க்கு முத்தியைக்காட்டிக் களிக்கும். பிடிக்கு மாக்கள் வயற்காட்டு இக்கு அளிக்கும்; பிடி - பெண்யானை; வயற்கா டென்பது வழக்கு. இக்கு - கரும்பை. யோகத்தாருடைய அத்தர்; அத்தர் - தலைவர். இடப்பாகம் தாரத்தர் - இடப்பாகத்திலே தேவியாரை உடையவர்; தாரம் - மனைவி. (எச)

75. யாணர்மிகு மாவணமு மின்புதவு வீதியுஞ்சீர்
காணம் பலமன் கழுக்குன்றே—பேணரிய
மேனி சிவந்தார் விடுதூது முன்பரவை
பானி சிவந்தார் பதி.

(கு - பு.) யாணர் - புதுவருவாய். ஆவணம் காணம் பல மன் - கடைவீதிகள் பலபொன்னைப் பொருந்தும். இன்பு உதவு வீதி சீரைக்காண்கின்ற அம்பலம் மன்; அம்பலம் - சபை; கோயிலுமாம். சிவந்த மேனியார். விடு தூது முன் பரவை பால் நிசியில் வந்தார்; நிசி - இராத்திரி(எரு)

76. புவிகொள் பலாச்சுளைகள் பொங்கறவோர் கைகள்
கவிகைமரு வுங்கழுக் குன்றே—பவமார்
எமையா ளிடத்தன்பு றெய்த வருளும்
உமையா ளிடத்த னுவப்பு.

(கு - பு.) பலாச்சுளைகள் கவிகளின் கையில் மன்னும்; கவி - குரங்கு. அறவோர் கைகள் கவிகை மன்னும்; கவிகை - கொடை. அறவோர் முனிவரெனக் கொண்டு குடை மன்னு மெனலுமாம். பவம் - பிறவி; பாவமும் ஆம். எமை ஆளும் இடத்தில் அன்பு உள் எய்த அருளும்; இடம்-செவ்வி. உமாதேவியார் தங்கிய இடத்தன். (எசு)

77. வானூர் மலைச்சரியு மாறு வயலுநீர்க்
கானாறு மேவுங் கழுக்குன்றே—மேனாளிற்
கிட்டருந்த வந்தான் கிடைத்தவந்தி தானிட்ட
பிட்டருந்த வந்தான்றன் பெட்பு.

(கு - பு.) மலைச்சரி கான் ஆறு மேவும்; மலைச்சரி - மலைச்சாரல்; கான் ஆறு - காட்டாறு. வயல் நீர்க்கால்களையும் நாறுகளையும் மேவும்;

நாறு - நாற்றுக்கள். கிட்ட அரு தவம் தான் கிடைக்கப்பெற்ற வந்தி; தான்: அசை; வந்தி - பிட்டு வாணிச்சி. பிட்டு அருந்துதற்கு வந்தான். (எஎ)

78. தான மிருகரியுந் தண்மூ லிகையுமராக்
கானஞ் சரிக்குங் கழுக்குன்றே—ஈனம்
அறுத்த வரையா னமலன்விடக் கச்சுப்
பொறுத்த வரையான் புரம்.

(கு - பு.) தானம் மிகு கரி மராக் கானத்தில் சரிக்கும்; தானம் - மதம்; மரா - கடம்பு. அரா கால்கின்ற நஞ்சை மூலிகை அரிக்கும்; அரா - பாம்பு; அரிக்கும் - நீக்கும். ஈனம் அறுத்தவர் ஐயான்; ஐயான் - தலைவனாக உள்ளவன். அமலன். விடக்கச்சு - விடத்தை உடைய பாம்பாகிய கச்சை; அரையான் - இடையை உடையவன். (எஅ)

79. மன்னுபுகழ் வள்ளல்களு மாதரார் வாய்மொழியும்
கன்ன னிகராங் கழுக்குன்றே—முன்னிகலிச்
சொற்கூ விளத்தான் றுருவரியுங் காணவொணா
நற்கூ விளத்தா னகம்.

(கு - பு.) வள்ளல்கள் கன்னனை நிகர் ஆம்; மாதரார் வாய்மொழி கன்னலை நிகர் ஆம்; கன்னல் - கரும்பை; சர்க்கரையை. முன் இகலி - முற்காலத்தில் பகைமை கொண்டு. கூ விள்ளும்படி தான் துருவும் அரியும்; கூ - பூமி; துருவு - தேடிய; அரியும் - திருமாலும். கூ விள்ளத்தான் துருவரி யென்பது, "காப்பிட்ட பிள்ளைக் கறிக்காசைப் பட்டுவை கைக்கரைமேல், மாப்பிட் டுவந்த மதுரேச னேமலை யானநின்னைக், கூப்பிட்டு நின்று குனிந்தொரு கோலக்கொம் பாற்றடவிப், பூப்பட்ட கண்ணிச் சயமாக்கி னுண்மைப் புயல்வண்ணனே" என்னும் பாடலை நினைப்பிக்கின்றது. கூவிளம் - வில்வம். நகம் - மலை. (எகூ)

80. திக்கயநே ருங்கரியுஞ் செல்வர்மனை யுஞ்சுவர்க்கம்
கைக்கவள மன்னுங் கழுக்குன்றே—மெய்க்கும்
சமையத் தலைவரையான் சம்புவெள்ளி யென்ன
அமையத் தலைவரையான் ஆர்வு.

(கு - பு.) திக்கயம் - திசையானைகளை. சு வர்க்கம் - நல்ல கூட்டம். கவளம் - யானையின் உணவு. செல்வர்மனை சுவர்க்கம் கைக்கும்படி வளம் மன்னும். சமையம் தலைவர் ஐயான் - சம்பந்தமூர்த்திநாயனார் முதலிய சமய குரவர்களுக்குத் தலைவன். வெள்ளி என்ன அமைந்த அந்தத் தலைவரையான்; தலை - தலைமை. வெள்ளிவரை - கயிலையங்கிரி. (அ௦)



81. புனலுண் முகிலும் பொழில்சேர் கனியும்
கனருசி மேவுகழுக் குன்றே—அனக்குழிமுன்
குண்டோ தரற்குக் கொடுத்தபிரா னல்வேதம்
பண்டோ தரற்குப் பதி.

(கு- பு.) கனருசி - மின்னலை; மிக்க சுவையை. பண்டு நால்வேதம் ஓதும் அரனுக்கு. (அக)

82. நற்குலத்து வந்தோரு நாடுமணி வீதிகளும்
கற்றளி யோவாக் கழுக்குன்றே—பொற்கழன்மேற்
கோவை யிடத்தான் குளிர்துளவற் காழிதந்தோன்
பாவை யிடத்தான் பதி.

(கு - பு.) நல் குலத்து வந்தோர் கற்று அளி ஓவா; அளி - கருணையை. கற்றளி - கல்லாற் செய்யப்பட்ட ஆலயங்கள். கோவை இட - கண்ணை இடுதலால். துளவற்கு - திருமாலுக்கு. ஆழி - சக்காயுதத்தை. (அஉ)

83. சிட்டர்தொழு மாலயமுஞ் செய்ய மலர்ப்பொழிலும்
கட்டளை மாறாக் கழுக்குன்றே—கிட்டித்
திருப்பதத் தானற் றிகழ்மதியைத் தேய்த்த
பருப்பதத் தானற் பதி.

(கு - பு.) ஆலயம் கட்டளை மாறா; கட்டளை - நிவந்தங்கள் (ஏற்பாடுகள்); மலர் பொழிலும் கள் தளை மாறா; தளை - கட்டு. 'மலர்பொழியும் கட்டளை மாறா' எனவும் பாடம்; இதற்கு மலர்கள் சொரியும் தேன்கள் வயல்களில் மாறாத என்பது பொருள். திரு பதத்தான் அல் திகழ் மதியைத் தேய்த்த; ஆன் மூன்றாம் வேற்றுமை உருபு. அல் - இரவில். பருப்பதம் - ஸ்ரீ சைலம் என்னும் தலம். (அ௩)

84. பொன்றாழ் மனையகமும் புண்ணியரும் பாசவினை
கன்றா தரிக்குங் கழுக்குன்றே—துன்றுமன்பிற்
றாழ வுரியார் தமக்கருள்வார் வந்தெதிர்த்த
வேழ வுரியார் விருப்பு.

(கு - பு.) மனையகம் கன்று ஆ தரிக்கும்; கன்றா - கன்றுகளும் பசுக்களும்; கன்றுகளை ஆதரிக்கும் எனலுமாம். புண்ணியர் பாசவினை கன்றாது அரிக்கும்; அரிக்கும் - கெடுக்கும். தாழ - வணங்குதற்கு. வேழ உரியார் - யானைத்தோலினர். (அ௪)

85. துன்னுமணஞ் செய்விப்போர் சூழா லயஞ்சமைப்போர்
கன்னிதா னஞ்செய் கழுக்குன்றே—துன்னுசைவம்
நன்கூ ரகத்தன்பர் நாளு மறவாத
புன்கூ ரகத்தன் பொருப்பு.

(கு - பு.) மணம் செய்விப்போர் கன்னிதானம் செய்; கன்னிதானம் - கன்னிகாதானத்தை. ஆலயம் சமைப்போர் கல் நிதானம் செய்; நிதானம் - சமம். சைவம் நன்கு ஊர் அகத்து அன்பர்; அகம் - மனம். புன்கூர் - திருப்புன்கூரெனும் தலம். அகம் - இடம். (அரு)

86. சாலச் சிவகதையாற் சைவர்நமன் கோளையரன்
காலங் கழிக்குங் கழுக்குன்றே—மாலெனுமோர்
அஞ்சரத்தின் றோலா ரணிமுப் புரமெரித்தோர்
குஞ்சரத்தின் றோலார் குடி.

(கு - பு.) சைவர் சிவ கதையால் காலம் கழிக்கும். நமனுடைய கோளை அரன் கால் அங்கு அழிக்கும்;கோள்- கொள்கையை. மால் என்னும் ஓர் அம் சரத்தினால் தோலார் அணி முப்புரம் எரித்தோர்; சரத்தினால் - அம்பால்; தோலார் - வினையோரிடத்துத் தோல்வியில்லாதாராகிய அசுரர்களுடைய; "கயவர் புரமோ ரம்பாற் செற்றவன்" (தே. திருநா.) குஞ்சரத்தின் றோல் - யானைத்தோல். (அசா)

87. பரந்திழியு மஞ்சனத்துப் பண்வீணை மாதர்
கரந்தைவரு நற்கழுக் குன்றே—புரந்தீ
இடப்பூவை யத்தன் றிவர்ந்தோ னுமையாம்
மடப்பூவை யத்தன் மனை.

(கு - பு.) திருமஞ்சனத்திற் கரந்தை வரும்; கரந்தை - சிவகரந்தை. மாதர் கரம் பண் வீணையைத் தைவரும்; கரம் - கைகள்; தைவரும் - தடவும். பூ வையத்து - பூமியாகிய தேரில்; வையம் - தேர். அன்று இவர்ந்தோன். உமையாம் மடம் பூவை அத்தன்; மடம் - இளமை; அத்தம் - பாதி. (அஎ)

88. செப்புமன்னர் முற்றத்துத் தேற்றார் மலர்ச்சோலைக்
கப்பந் தருவார் கழுக்குன்றே—செப்பரிய
மானப் பணிவான் மதிவெண் டலையோடு
வானப் பணிவான் மனை.

(கு - பு.) தேற்றார் கப்பம் தரும்; தேற்றார்-பகைவர்;கப்பம் - திறை. சோலை கப்பு அம் தரு ஆர் - சோலையில் கப்புக்களை உடைய அழகிய மரங்



கள் பொருந்தும். மானம் பணி - மானத்தை யுடைய பாம்பு. வால் மதி - வெண்மையான சந்திரன். வான் அப்பு - ஆகாய கங்கையை. (அஅ)

89. சொற்பெரிய பாந்தள் சொரிகால மாரிமின்னார்
கற்புழை வீறுங் கழுக்குன்றே—விற்கதிர்கள்
விண்பாவி னன்பல் விழவடித்தா ரையடிகள்
வெண்பாவி னன்பர் விருப்பு.

(கு - பு.) பாந்தள் கல் புழை வீறும்; பாந்தள் - பாம்பு;கல் புழை - கல்வெடிப்பு; குகை. காலமாரி மின்னார் கற்பு உழை வீறும்; கற்பு உழை - கற்பினால்; உருபு மயக்கம். வில் கதிர்கள் விண் பாவு இனன் பல் விழ அடித்தார்; கதிர்கள் - கிரணங்கள்; இனன் - சூரியனது. ஐயடிகள் - ஐயடிகள் காடவர்கோன் நாயனார். வெண்பா என்பது அவரருளிச்செய்த கேத்திரத் திருவெண்பாவை. (அகூ)

## முப்பொருட் சிலேடை.

90. புரிவரும்யோ கத்தார் புரவலர்க ளந்ந
கரிமா விழைகழுக் குன்றே—எரிபாம்பார்
கையா னரையானான் காமுகனென் றென்றொண்டு
கையா னரையானான் காப்பு.

(கு - பு.) யோகத்தார் கரிமா இழை; கரிமா - எண்வகைச் சித்திகளுள் ஒன்று. புரவலர்கள் கரியையும் மாவையும் இழைக்கும்; மா - குதிரை. இழைக்கும் - வளம்படச் செய்யும். இழை கழுக்குன்று: வினைத்தொகை. அந் நகரி - அந்த நகரம். மா விழை - திருமகள் விரும்பும். எரி ஆர்ந்த கையான்; பாம்பார்ந்த அரையான்: நிரனிறை. நான் காமுகன் என்று என் தொண்டைக் கையான்; கையான் - வெறான். நரை ஆனான் - வெண்மையான இடபத்தை உடையவன்;ஆன் - இடபம். (கூ0)

91. வளத்தில் லறத்தோர் மதனன் கரிநி
களத்திரமன் னுங்கழுக் குன்றே—அளக்கரும்விண்
மண்டெரி யானான் வளர்கொடியோ னெற்றியிற்கண்
மண்டெரி யானான் மனை.

(கு - பு.) வளத்து இல்லறத்தோர் களத்திரம் மன்னும்;களத்திரம் - மனைவி. மதனன் கள் அத்திரம் மன்னும்; கள் அத்திரம் - மலர்ப்பாணம். கரி நிகளம் திரம் மன்னும்; நிகளம் - கால்தளை; திரம் - ஸ்திரமாக. விண் மண் தெரியான். ஆன் வளர் கொடியோன். நெற்றியில் கண் மண்டு எரி ஆனான்; ஆனான் - நீங்காதவன். (கூக)

92. மருவுபொழின் மாதர்விழி வாசத் தடநி
கருவரி காட்டுகழுக் குன்றே—வருநரியாம்
மாப்பினா கத்தான் வரமுன் பரிமேற்சென்
மாப்பினா கத்தான் வரை.

(கு - பு.) பொழில் கருவரி காட்டும்; கருவரி - கரிய வண்டு. மாதர் விழி கருமையான அரியைக் காட்டும்; அரி - இரேகை. தடம் நிகர் உவரி காட்டும் - குளம் தனக்கு ஒப்புப் பொருளாக உள்ள கடலைத் தான் காட்டும்; குளம் கடல் போன்ற தென்பது கருத்து. நரி ஆம் மா பின் ஆக வர - நரியாகிய குதிரைகள் பின்னேவர; தான்: அசை. பரிமேல் செல் மா பினாகத் தான்; பரி - குதிரை; பினாகம் - சிவபெருமானுடைய வில். (கூ௨)

93. அனமருவு வாவி யணிவீதி சான்றோர்
கனவிரத மேவுகழுக் குன்றே—புனையும்
விதிதலைக் கையான் விரும்பார் பிறவி
பொதிதலைக் கையான் புரம்.

(கு - பு.) வாவி கனவிரதத்தை மேவும்; கனவிரதம் - நீர். வீதி கன இரதம் மன்னும்; கன இரதம் - பொன்னாலாகியதேர்; கனம் - பொன். சான்றோர் கனவிரதம் மன்னும்; கன விரதம் - பெரிய விரதம். விதியின் தலையை ஏந்திய கையான்; விதி - பிரமன். விரும்பார் பிறவி பொதிதலைக் கையான் - அன்பில்லாதவர் பிறவியை நீக்காதவன். (கூ௩)

94. விரவுபொழி லன்னமிடு மெல்லிய ரீவோர்
கரவீர மன்னுகழுக் குன்றே—விரவிவரு
மாலா நடத்தினான் வாதுசெயுங் காளிக்குத்
தோலா நடத்தினான் சூழ்வு.

(கு - பு.) பொழில் கரவீரம் மன்னும்; கரவீரம் - அலரி. அன்னம் இடும் மெல்லியர் கர ஈரம்; கர ஈரம் - கையீரம். ஈவோர்கரவு ஈர; கரவு ஈர - ஒளித்தல் அகல. மால் ஆ நடத்தினான் - திருமாலாகிய இடபத்தைச் செலுத்தியவன்; ஆ - இடபம். காளிக்குத் தோலாத நடத்தை உடையவன்; நடம் - நடனம். (கூ௪)

95. விரும்புமலர் வெண்முத்தம் வேந்தர் சமரில்
கரும்புண் மலிகழுக் குன்றே—அரும்புதன



மாவடுவ ருந்துவார் வானீர் முடியரன்பர்
மாவடுவ ருந்துவார் வாழ்வு.

(கு - பு.) மலர் கரும்புள் மலி; கரும்புள் - வண்டு. வெண் முத்தம் கரும்பு உள் மலி; முத்துப் பிறக்கும் இடங்களில் கரும்பு ஒன்று. வேந்தர் சமரில் கரும்புண் மலி; கரும்புண் - பெரியபுண். அரும்பு தனம் மா வடுவர் - அரும்பிய கொங்கைகளாலாகிய பெரிய வடுவை உடையவர். உந்துவார் வான் நீர் - கங்கை. அன்பர் மா வடுவை அருந்துவார்; அன்பரென்றது அரிவாட்டாய நாயனாரை. (கூ௫)

நாற்பொருட் சிலேடை.

96. விளங்கு மதிபூ விடப்பாம் பரனார்
களங்க முறுகழுக் குன்றே— துளங்கலிலாக்
கல்லா லடிப்பிரியான் காணக் கதிதந்த
கல்லா லடிப்பிரியான் காப்பு.

(கு - பு.) மதி களங்கம் உறு. பூகள் அம் கம் உறு - மலர் கள்ளாகிய அழகிய நீரை மருவிய. விடப் பாம்பு கள்ளத்தையும் கம்மையும் உறும்; கம் - காற்று. அரனார் களம் கம் உறும் - சிவ பெருமான் திருக்கழுத்து மேகத்தை ஒக்கும். கல்லால் அடிப்பு இரியான்; கல்லால் அடித்தவர் சாக்கிய நாயனார். கல்லாலமரத்தின் அடியைப் பிரியான். (கூ௬)

97. பெட்கும் பொழின்மாடம் பேதையர்க ணாட்டமிடை
கட்கந்தந் துன்னுங் கழுக்குன்றே—நட்புறுகோ
பாலன் றுதித்தார் பசிய நறுவேயின்
பாலன் றுதித்தார் பதி.

(கு - பு.) பெட்கும் - விரும்பப்படும். பொழில் கள்ளின் கந்தத்தைத் துன்னும்; கந்தம் - மணம். மாடம் கட்கு அந்தம் துன்னும் - மாடங்கள் கண்களுக்கு அழகு பொருந்தும். நாட்டம் கட்கம் தந்து உன்னும் - கண் கட்கவடிவத்தைக் காட்டிப் பிறரால் நினைக்கப்படும். இடைகட்கு அம் தந்து உன்னும்; தந்து - நூல். கோபாலனால் துதிக்கப்பட்டார். வேயின்பால் அன்று உதித்தார்; வேயின்பால் உதித்தது திருநெல்வேலியிலும் திருப்பாசூரிலும். (கூ௭)

98. சிங்கார மார்குவடு சிற்பரனார் தோள்கைகண்டம்
கங்காள மன்னுங் கழுக்குன்றே—சிங்கியுண

நாகைக்கா ரோணத்தார் நான்முகத்தார் நாடருஞ்சீர்
நாகைக்கா ரோணத்தார் நாடு.

(கு - பு.) குவடு கங்கு ஆள மன்னும்; கங்கு - கழுகு. சிற்பரனார் தோள் கங்காளம் மன்னும்; கங்காளம் - முழு எலும்பு. சிற்பரனார் கை கம்மையும் காளத்தையும் மன்னும்; கம் - பிரமன்தலை; காளம் - சூலம். சிற்பரனார் கண்டம் கம் காளம் மன்னும்; கம் காளம் - நீரில் தோன்றிய விடம். சிங்கி - விடத்தை. நா கைக்கார் - நா கைப்பு அடையார். ஓணத்தாரும் நான்முகத்தாரும்; ஓணத்தார் - திருமால்; ஓணம் - திருவோணம். நாகைக் காரோணம் - திருநாகைக் காரோணமென்னும் தலம். (கூஅ)

99. தொண்டர்மடங் கோகனகஞ் சூழ்கயஞ்சேல் வெற்புமின்னார்
கண்டனந் துன்னுங் கழுக்குன்றே—எண்டருமா
கம்பத் தடியானுன் காணவருள் கச்சியே
கம்பத் தடியானுன் காப்பு.

(கு - பு.) தொண்டர் மடம் கண்டு அனம் துன்னும்; கண்டு அனம் - கற்கண்டும் உண்ணும் அன்னமும். கோகனகம் கண்டு அன்னம் துன்னும்; கோகனகம் - தாமரை; அன்னம் - அன்னப் பறவை. கயம் கண்டல் நந்து உன்னும்; கண்டல் - தாழையை; நந்து - சங்குகளை; உன்னும் - அடைய நினைக்கும். சேலும் வெற்பும் முறையே மின்னாருடைய கண்ணையும் தனத்தையும் ஒக்கும். ஆகம் பத்து அடியான் நான் - பத்துச் சரீரங்கள் படைத்த திருமாலாகிய அடியவனும், அடியேனும். கச்சி ஏகம்பத்து அடியான்; ஏகம்பம் - ஏகாம்பரம்; ஒற்றை மாமரம்; அடியான் - அடியிலுள்ளவன். (கூகூ)

100. சந்தக் கடம்பாவி சார்சேவ கம்வீதி
கந்தரங்க மாருக் கழுக்குன்றே—மைந்தனஞ்
ஞானத் தினிப்பார் நணுகா தருள்பாணர்
கானத் தினிப்பார் களிப்பு.

(கு - பு.) சந்தக் கடம்பு கந்தர் அங்கம் மாருத; கந்தர் - முருகக் கடவுள். ஆவி கம் தரங்கம் மாரு; ஆவி - குளம். கம் தரங்கம் - நீரலை. சேவகம் கந்து அரங்க மாரு - யானைகள் தூங்கும் இடம் கட்டுத்தறிகள் அழிந்து விடும்படி மாருத. வீதி கந்து அரங்கம் மாரு - வீதி தூண்களை உடைய சபைகள் மாருத. மைந்தன் - மைந்தனாகிய அடியேன். அஞ்ஞானத்தால் இனி பார் நணுகாது. பாணர் கானத்து இனிப்பார்; பாணர் - திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார். (கoo)



னீயோ செய்யாய் நின்மல னுயிட்
டியல்பெனிற் போகா தென்று மயல்கெடப்
பந்தம் வந்த வாறிங்
கந்த மாதி யில்லா யருளே.

மன்ன—ஞான ராஜாவே!
ஊரும்—(திருவெண்ணெய்நல்லூரை) அவதாரத் தலமாகவும்,
பெயரும்—(மெய்கண்டான் என்பதைத்) திருப்பெயராகவும்,
உருவும்—(மானுட வடிவைத்) திருமேனியாகவும்
கொண்டு—தாங்கி (ஆசாரிய மூர்த்தியாக வெளிப்பட்டு)
என் ஊரும்—நான் வந்த வுலகத்தையும்,
பெயரும்—(கொண்ட) பெயரையும்,
உருவும்—(எடுத்த) உடம்பையும்,
கெடுத்த—(எனக்கு) இல்லையாகச் செய்து (என்னைத் தமது வியாபகத்து ளடங்கி) வியாபிக்கச் செய்தவரும்
பெண்ணை சூழ்ந்த—பெண்ணையாறு சூழ்ந்த
வெண்ணை அம் பதியில்—திருவெண்ணெய்நல்லூரென்னுந் திவ்வியத்தலத்தில் (எழுந்தருளியிருக்கின்றவரும் ஆகிய)
சைவ சிகாமணி—சைவசிகாமணியே!
மெய்யர் மெய்ய—மெய்யடியா ருள்ளத்தில் வீற்றிருக்கும் மெய் [கண்ட தேவரே!
அந்தம் ஆதி இல்லாய்—முடிவு முதலு மில்லாதவரே!
கூறிய—(ஆகமங்கள்) பிரஸ்தாபிக்கின்ற
மூன்று மலத்தின்—(ஆணவம், கன்மம், மாயை யென்னு) மூன்று [மலங்களின்
குணக்குறி— தன்மைகளது அடையாளங்களை
வேறு—தனித்தனியாக
கிளக்கின்—(நான்) வினவ (நீர்)
விகற்பம்—தன்னை மதித்தல்,
கற்பம்—முனைத்து நிற்றல்,
குரோதம்—(பிறரைக்) கோபித்தல்,
மோகம்—(விடயங்களில்) மயங்குதல்,
கொலை—(உயிர்களைக்) கொல்லுதல்,
அஞர்—(விடயங்களின் பிரிவிற்) கவலுதல்,
மதம்—(அவைகளைப் பெரிது) மதித்தல்,
நகை—(வாழ்விற்) பெருமித மடைதல்
எண்குணனும்—(ஆகிய) எட்டுக் குணங்களும்

விராய்—சேர்ந்து
ஆணவம் என—ஆணவத்தின் அடையாளங்க ளென்று
விளம்பினை—உபதேசித்தீர்.
அஞ்ஞானம்—திரிபுணர்ச்சி,
பொய்—பொய் பேசல்,
அயர்வு—மறத்தல்,
மோகம்—ஆசைப்படுதல்,
பைசாசூந்நியம்—பொறுமைப்படுதல்,
மாற்சரியம்—பிறர்பால் நீண்ட வெறுப்பு,
பயம்—அஞ்சுதல்
ஆய—ஆகிய
எழ் குணனும்—எழு குணங்களும்
மாயைக்கு—மாயையின் அடையாளங்களென்று
அருளினை—உபதேசித்தீர்.
இருத்தலும்—யாதானு மோரிடத்திற் றங்குதல்,
கிடத்தலும்—நோயாய்க் கிடத்தல்,
இருவினை இயற்றலும்—புண்ணிய பாவங்களைச் செய்தல்,
விடுத்தலும்—பற்றுக்களை விடுதல்,
பரநிந்தை (உம்)—பிறரை நிந்தித்தல்,
மேவல் (உம்)—இகழ்ந்தாரை நேசித்தல்
என்று எடுத்த—என்று விளக்கிய
ஆறு வகைக் குணனும்—ஆறு குணங்களும்
கருமத்து—கருமத்தின் அடையாளங்களென்று
அருளினை—உபதேசித்தீர்.

(நிற்க)

அவைதானும்—அம் மும்மலங்களும்
நீங்காது—(என்னைவிட்டு) நீங்காமல்
தாமே தான் ஆய்—அவைகள் நானே (யென்று எனக்குத் திரிபு
ணர்ச்சி யுண்டாகும்படி என்மயம்) ஆகி
நின்று—(என்னோடு) கலந்திருந்து
தம் வழி—தமது வசத்திலேயே
செலுத்தி—(என்னை யிழுத்துத்) தொழிற்படுத்தலால்
என்வழி என்பது ஒன்று—எனக்கெனச் சுதந்திரச்செய லொன்
இன்றாம்—இல்லையாகும். [றாயினும்

(நீர்)

மும்மலம்—அம்மூன்று மலங்களும்



சடம் என—சடப்பொருள்களென்றும்
மொழிந்தனை—உபதேசித்தீர்.
(ஆனால் என்னை வசப்படுத்துஞ் செயல் அவைகளுக்குளதாக
அவைகளைச் சடமென்றல்)
மாறுகோள் கூறல்—விபரீதப் பேச்சாக விருக்கின்றது.

(ஆனால்)

தேறும்—நிச்சயிக்கப்பட்ட
சடம்—சடப்பொருள்கள் (ஆன்மாவோடு கூடுதலால்)
செயலதனை—மயக்குந் தொழிலை
சார்ந்திடும்—உடையனவாகும்:
எனின்—என்பீராயின்

(அத்தொழிலை)

கடம் படம் அதனுள்—குடம் துணி முதலிய சடங்களில்
கண்டிலன்—(நான்) காணவில்லை.

(ஆனால் அது)

ஊன் திரள்—உடலில்
படும்—படுகின்ற
விடம் போன்றது—விஷம் (அறிவை மயக்குதல்) போன்றது
ஆயின்—என்பீராயின் (அவ்விஷம்)
தோன்றி—வந்து (அறிவை)
அணைந்து—மயக்கி
அகறல் வேண்டும்—(கொஞ்ச நேரத்தில்) விட்டு நீங்குகின்றது.
(அன்றியும் மலங்களுக்குப்போல அதற்கு)
குணங்களும்—தன்மைகளும்
பன்மை இன்றாகும்—பலவாதலில்லை.

(இன்னும்)

தானோ—(அம்மலங்களில்) ஒன்றுதானும்
வந்து—(வலிய) வந்து
என்னை—என்னை
அணைதரமாட்டாது—பந்தித்தல் முடியாது.
யானோ—நானே (வலியப்போய்)
செய்கிலன்—(அவைகளைப்) பற்றிக்கொள்ளவு மாட்டேன்.
நீயோ—நீரும்
நின்மலன் ஆயிட்டு—மலமில்லாதவ ராகையால்
செய்யாய்—(என்னையும் மலங்களையுஞ்) சேர்த்துவைக்கமாட்டீர்.
இயல்பு எனின்—(அவைகள் எனது) தன்மைக ளென்பீராயின்

போகாது—(முத்தியிலும் என்னைவிட்டு) நீங்கா.

(ஆகலின் நீர்)

என்றும்—இனியேனும்
மயல்—சந்தேகம்
கெட—நீங்கும்படி
பந்தம்—மலங்கள்
வந்தவாறு—(எனக்கு) வந்த விதத்தை
இங்கு—இப்போது
அருள்—உபதேசித்தருளுக.

சடம் எந்தக் காரியத்துக்கும் வினைமுதலாவ தில்லை. மும்மலங்களும் சடம். அவை வினை முதலாக நின்று ஆன்மாவை மயக்குவ தெப்படி?

அவை சடமாயினும் ஆன்மாவோடு கூடுவதால் மயக்குந் தொழிலைச் செய்யுமெனின், கடம் பட முதலிய சடங்களும் ஆன்மாவோடு கூடுகின்றன. அவையும் ஆன்மாவை மயக்காமை யேன்?

விஷமாகிய சடம் அறிவை மயக்குவ துண்மை. ஆனால், அது சிறிது பொழுதில் நீங்கிவிடுகின்றது. அங்ஙனமே மலங்களும் நீங்காமை யேன்?

இன்னும், விஷத்துக்கு மயக்குஞ் சக்தி யொன்றே யுண்டு. மலங்களுக்கோ பல சக்திகள் உளவாதல் மேற்கூறப்பட்டது. அங்ஙனமாயின் உவமானத்தி லுள்ளவாறு உவமேயத்திலு மில்லாமை யேன்?

மலஞ் சடப்பொரு ளாகலின் ஆன்மாவைத் தானாக வந்து பந்தியாது. ஆன்மா துன்பத்துக் கேதுவாகிய மலத்தில் தானாகப்போ யகப்படாது. சிவம் அருண்ஞானப் பொருளாகலின் ஆன்மாவையும் மலத்தையுஞ் சேர்த்துவையாது. இன்னும், குணியைவிட்டுக் குணம் எக்காலத்திலும் பிரிவதேயில்லை. மலம் ஆன்மாவின் குணமாயின் முத்தியினும் ஆன்மாவை விட்டு விலகாது. அங்ஙனமாயின், ஆன்மாவுக்கு மலபந்தம் வந்தவிதம் எப்படி?

---

5. அருள்முன்பு நில்லா •தடியேற்குக் கண்ணின்
றிருள்கண்ட வாறென்கொ லெந்தாய்—மருள்கொண்ட
மாலையா வெண்ணைவாழ் மன்னவா வென்னுடைய
மாலையா மாற்ற மதி.

எந்தாய்—எனது தந்தையே!
மருள்கொண்ட—(வண்டுகள்) மருள் என்னும் இசையைப் பாடு
மாலையா—மாலையை யணிந்தவரே! [கின்ற
வெண்ணைவாழ்—திருவெண்ணெய்நல்லூரில் வாழ்கின்ற



மன்னவா—ஞானராஜரே!
ஐயா—குருமூர்த்தியே!

(மலம் இருள்போன்ற தாகலின்)

அருள் முன்பு—(உமது) ஞானப் பிரகாசத்தின்முன்
நில்லாது—மடங்கி யில்லையாய்விடும்.
அடியேற்கு—எனக்கோ
கண் அன்று—(தனித்து நின்று ஒன்றனை) அறியுஞ் சக்தியுமில்லை.

(அப்படியிருக்க)

இருள் கண்ட வாறு—(நான்) மலத்தைத் தரிசித்த விதம்
என்—எப்படி? (என்னும்)
என்னுடைய மால்—என்னுடைய மயக்கத்தை
மாற்ற—போக்குதற்கு
மதி—திருவுளங்கொண் டருளுக.

ஆன்மா கருவிகரணங்களோடு கூடியிருக்கும்போதும் மலத்தைத் தரிசிப்பதில்லை. சிவப்பிரகாசத்தின்முன் மலவிருள் மடங்கிவிடுவதால் கருவி கரணங்களெல்லாம் நீங்கிச் சிவப்பிரகாசத்தைப் பெற்ற பின்னரும் அது மலத்தைத் தரிசித்தல் முடியாது. கருவி கரணங்களையாவது சிவத்தையாவது சாராமல் அஃதறிதலு மில்லை. ஆனால் அதற்கு மலதரிசன முண்டென்றுஞ் சொல்லப்படுகின்றது. அத் தரிசனங் கிடைப்ப தெப்படி?

---

6. மதிநுதல் பாக னாகி கதிதா
வெண்ணைத் தோன்றி நண்ணியுள் புகுந்தென்
னுளம்வெளி செய்துன் னளவில் காட்சி
காட்டியெற் காட்டினை யெனினே நாட்டியெ
னுண்மையும் பெருமையு நுவலி னண்ணல்
பாதாள சத்தி பரியந்த மாக
வோதி யுணர்ந்த யானே யேக
முழுத்துநின் றனனே முதல்வ முழுத்தும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
யாங்கைந் தவத்தையு மடைந்தன னீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் றாக்கி
யெவ்விடத் துண்மையு மிவ்விடத் தார்தலுஞ்
செல்லிடத் தெய்தலுந் தெரித்த மூன்றினு
ளொன்றெனக் கருளல் வேண்டு மென்று

மில்ல திலதா யுள்ள துளதெனுஞ்
சொல்லே சொல்லாய்ச் சொல்லுங் காலைச்
சிறுத்தலும் பெருத்தலு மிலவே நிறுத்தி
யானை யெறும்பி னானது போலெனின்
ஞான மன்றவை காய வாழ்க்கை
மற்றவை யடைந்தன வுளவெனி னற்றன்று
விட்ட குறையி னறிந்து தொன்று
தொட்டுவந் தனவென வேண்டு நட்ட
பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையு
முரியது நினக்கே யுண்மை பெரியோ
யெனக்கின் றாகு மென்று
மனக்கினி யாயினி மற்றது மொழியே.

மதிநுதல் பாகன் ஆகி—உமையொருபாக மானவரே!
முதல்வ—தேவதேவரே!
பெரியோய்—எங்கும் நிறைந்தவரே!
என்றும்—எப்போதும்
மனக்கு இனியாய்—(என்) சிந்தைக் கினியவரே!
(நீர்)
கதி தர—(உமது) திருவடி யின்பத்தைத் தரும்பொருட்டு
வெண்ணை—திருவெண்ணெய்நல்லூரில்
தோன்றி—(ஆசாரிய மூர்த்தியாக) அவதரித்து,
நண்ணி—(என்னிடம்) வலிய வந்து,
என் உள் புகுந்து—என் அறிவிற் கலந்து,
உளம் வெளி செய்து—அவ் வறிவைச் சுத்தப் படுத்தி
அளவு இல் உன் காட்சி—காண்டல் முதலிய அளவைகட் கெட்
காட்டி—(எனக்குத்) தரிசிப்பித்து [டாத உமது உண்மையை
எற்காட்டினை—என் னுண்மையையுந் தரிசிப்பித்தீர்.
எனின்—என்றால் (அப்பொழுது)
நாட்டி—விளக்கமாக
என் நுண்மையும்—என தறிவையும்
பெருமையும்—வியாபகத்தையும்
நுவலின்—சொல்லுவதாயின்
அண்ணல்—நீர்
(அண்டங்களெல்லாம் நிலை பெயராமல் நிற்கும்படி மேலே அரு
த்தமாக வைக்கின்ற உமது சத்திமுதல்)



பாதான சத்தி பரியந்தம்—கீழே ஆதாரமாக வைக்கின்ற உமது
ஆக—(அவை) பரவி நிற்க, [சத்திவரை
ஓதி உணர்ந்த யான்—ஞானத்தைக் கேட்டுத் தெளிந்த நான்
ஏக முழுத்தும்—எங்குமாய்
நின்றனன்—விளங்குகின்றேன் (என்னலாம்).
(இப்போது எனதியல்பிது. இவ்வியல்புடைய நான் இதுகாறும்)
முழுத்தும்—(என்கால) மெல்லாம்
புலன்—புலனை நுகர்தற்பொருட்டு
கடைப் பூழை—இழிந்த பஞ்சேந்திரியங்களிலும்
நுழைந்தனன்—அலைந்தேன். (அன்றியும்);
கலங்கி—(அறிவு) மயங்கி
ஐந்து அவத்தையும்—(சாக்கிர முதலிய) ஐந்து அவத்தைகளிலும்
அடைந்தனன்—சென்றேன்;
நீங்கி—அன்றியும்
போக்கு வரவு—இறப்புப் பிறப்புக்களிலும்
புரிந்தனன்—சுழன்றேன்.
(இவைகளும் எனதியல்பாகக் காணப்படுகின்றன. ஆகலின் நீர்)
தூக்கி—(எனது விருப்பத்தை) நன்கறிந்து
எவ்விடத்து உண்மையும்—எங்கும் நிறைதலாகிய வியாபகம்,
இவ்விடத்து ஆர்தலும்—அவத்தை முதலியன வுறுதலாகிய ஏக
[தேசம்,
செல் இடத்து எய்தலும்—சங்கார காலத்தில் எல்லாம்போய்த்
[தான் ஒரு பொருளெனமட்டு மிருத்தல்
தெரித்த—(என்று) சொல்லப்பட்ட
மூன்றினுள்—இம் மூன் றியல்புகளிலும்
ஒன்று—எனது உண்மையான வியல்பு இதுவென்று
எனக்கு—எனக்கு
அருளல் வேண்டும்—கூறியருளல் வேண்டும்.
(இன்னும் நீர்)
இல்லது—இல் பொருள்
என்றும் இலது ஆய்—எக்காலத்தும் இல்பொருளா யொழிய
உள்ளது—உள்பொருளே
(என்றும்) உளது எனும்—எக்காலத்தும் உள்பொருளாகும் என்
சொல்லே—சற்காரிய வாதத்தையே [கின்ற
சொல் ஆய்—உண்மை வாதமாக (அங்கீகரித்து)
சொல்லுங்காலை—விவகரிப்பீரல்லவா? அப்படியானால்

(ஓரே பொருளாகிய எனக்கு)
சிறுத்தலும்—ஏகதேசப்படுதலும்,
பெருத்தலும்—வியாபித்தலும்
(ஆகிய இரண்டு மாறுபட்ட தன்மைகள்)
இலவே—இருத்தல் கூடாவே?
நிறுத்தி—அதுநிற்க:
(எனது பெருமை சிறுமைகள்)
யானை (யின்)—யானை யுடலில் (நின்ற வுயிர் பெருத்தும்)
எறும்பின்—எறும்பின் உடலில் (நின்ற வுயிர் சிறுத்தும்)
ஆனது போல்—இருத்தல் போன்றன
எனின்—என்பீராயின்
அவை—உடலின் பெருமை சிறுமைகள்
ஞானம் அன்று—உயிருக்கு அல்லவாய்
காய வாழ்க்கை—உடலின் தன்மையாகவே யொழியும்.
மற்று—இன்னும் (நீர்)
அவை—அப் பெருமை சிறுமைகள்
அடைந்தன—(உயிர்) அடைந்த வுடம்புகளின் (அளவுக்கேற்ப
உள எனின்—(அவ் வுயிரி னறிவுக்கும்) உள்ளனவென்பீராயீ
அற்றன்று—அதுவும் பொருந்தாது.
(ஏனெனில் அவ் விவகாரத்தால்)
தொன்றுதொட்டு—அநாதிதொட்டே
விட்டகுறையின்—முற்பிறப்பின்
அறிந்து—அறிவோடு
வந்தன—(அடுத்த பிறப்பிலும் அவ்வுயிர்) வரும்
என வேண்டும்—என்பது சித்திக்கும்.
(அன்றியும்)
நட்ட—நிலைநிறுத்தப்பட்ட
பெரியதின்—பெரியதிற்கெல்லாம்
பெருமையும்—பெரியதாயிருத்தலும்,
சிறியதின்—சிறியதிற்கெல்லாம்
சிறுமையும்—சிறியதாயிருத்தலும்
நினக்கே—உமக்கே
உரியது—உரியன.
உண்மை—அவ் வியல்புகள்
எனக்கு—எனக்கு
இன்றாகும்—இலவாகும்.

# செய்தித் திரட்டு

**தமிழன்பர் மகாநாடு:**—இம் மகாநாட்டைக் கூட்டிவைத்து நடத்துவதில் ஈடுபட்டு ஒத்துழைக்கவும், பொருளுதவிபுரியவும், வரவேற்புச் சபையிலே அங்கத்தினராகச் சேர்ந்து கொள்ளவும், மகாநாட்டிலே ஆலோசனைக்குக் கொண்டுவர வேண்டியவைகளையும், அவற்றின் நோக்கங்கள் நன்கு நிறைவேறுதற்குரிய வுபாயங்களையும் தெரிவிக்கவும் தமிழன்பர்களை வேண்டிக்கொள்வதுடன், மகாநாடு டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களிற் கூட்டவுத்தேசித்திருப்பதாகவும், அங்கத்தினராவதற்கு இரண்டு ரூபாவுக்குக் குறையாதுகட்டணம் விதித்திருப்பதாகவும், சென்னைப் புத்தகாலயப் பிரசார சங்கத்தலைவர் திரு. K. V. கிருஷ்ணசாமிஐயர் தெரிவிக்கிறார்.

**திருக்காவீரம்:**—தேவாரத் திருப்பதிகம் பெற்ற இத்திருத்தலசிவாலய மகாகும்பாபிஷேகம் ஆவணி களஉ தேவகோட்டைத் திருவாளரும் பேட்டிவயல் நிறைமங்கலம் ஜமீந்தாரரும் ஆகிய ராம.அரு.அரு.ராம. அருணாசலம் செட்டியாரவர்களால் மிகச்சிறப்பாகச் செய்யப்பெற்றது. அதுதருணம் அம் மகாவைபவத்தையும், அதை நடத்தியவர்களின் பெருமையையும் விளக்கி, மணிவாசகஞானசம்பந்த சபைக் காரியதரிசி திரு. பா. சிதம்பரநாத பிள்ளையவர்கள் பாக்கள்பாடி அரங்கேற்றினர்.

**புதுச்சேரி:**—தமிழ்க்கல்விச் சங்கம், சென்னை திரு. கா. நமசிவாய முதலியாரவர்கள் தலைமையில் ஆகஸ்டு 28, 29உ களில் இனிது நடைபெற்றது. இச்சங்கத்திலிருந்து, 'பொன்மலர்' என்னும் திங்கள் வெளியீடு இம் மாதமுதல் வெளிவருமெனத் தெரிகிறது.

**உப்பூர்;**—வெயிலுகந்த விநாயகப் பெருமான் திருக்கோயிலில் ஆவணி கஉ மகாசதுர்த்தி மகோற்சவம், தேவகோட்டை ஜமீந்தார் குடும்பத்தினரால் சிறப்பாக நடைபெற்றது. மணிவாசகஞானசம்பந்தசபைக் காரியதரிசி திரு. பா. சிதம்பரநாத பிள்ளையவர்கள், வெயிலுகந்த விநாயகர் பஞ்சரத்னப்பாமாலை புனைந்து அரங்கேற்றினர்.

**திருமயிலை:**—தென்மாடவீதியில் குருந்தநீழலில் எழுந்தருளியிருக்கும் வெள்ளீச்சுரர் ஆலயத்தில் ஆவணி ௰உஉ சைவசமய பரமாசாரியர் நால்வருக்குந் திருமஞ்சன திருவாராதனையும், திருவுலாவும், தமிழ்வேத பாராயணங்களுடன் திருமுறை மகோற்சவமும், மாகேசுவரபூசையும், தமிழ்வேத பாராயண சபையாரால் மிகச்சிறப்பாகச் செய்யப்பெற்றன.

கபாலீச்சரத்தில் திருஞானசம்பந்தாதி நால்வர்களுக்கும், ஸ்ரீவாயிலார் நாயனாருக்கும் மகாமண்டபத்தில் மகாபிடேகமும், அடியார்களுக்கு அட்டிட்டலும், சைவபிரசங்கபாநு உயர்திரு கா. ராஜாராம் பிள்ளையவர்களால் வாயிலார்நாயனார் சரித்திர பிரசங்கமும், நல்விழாப் பொலிவும், ஆவணி கஉஉ கபாலீச்சர பக்தஜன சபையாரால் நடத்தப்பெற்றன.

**மதுரை:**—ச. நா. ச. சு. கடையை ஆவணி உஉஉ நிறுத்தி. ஷை தேதி முதல் இண்டோ கமர்ஷியல் பாங்கை யாரம்பித்து நடத்துவதாக ஷைபாங்கர்கள் அறிவிக்கின்றனர்.

**பறக்கும் விமானங்கள்:**— நேற்று நண்பகல் 'செட்டிநாடு' கிரௌண்டில் ஆறு விமானங்கள் வந்து, பத்துரூபா ஐந்துரூபா கட்டணம் பெற்று பறக்குமெனத் துண்டுத்தாள்களும் பறந்தன. காலுக்கும் அரைக்காலுக்கும் பறக்குங் காலமும் சமீபத்தில் வரும். இவ் வியந்திர வூர்திகளெல்லாம் நம் நாட்டில் நன்மைக்கு ஏற்பட்டவா? தீமைக்கு ஏற்பட்டவா? என்பதைக் கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர வேண்டும்.

**புதிய வைத்தியசாலை :**— கண், காது, மூக்கு, தொண்டை முதலிய வுறுப்புக்களைப்பற்றிய மருத்துவ நிபுணர் திருவாளர் T. S. வெஙட்டி அவர்களுடைய வைத்தியசாலையைக் காரைக்குடியில் 11—9—1933ல் செட்டிநாட்டுக் குமாரராஜா ஸ்ரீமான் M. A. முத்தைய செட்டியார் திறந்து வைத்தார்கள்.

**திருச்செங்கோடு:**—ஆடிமாத கார்த்திகை தொடங்கி ஆதிசைவ மகாசபை யாதரவுடன் ஆகமசாஸ்திர பாடகசாலையில் வடமொழிப் புலவர் காட்டுப்புத்தூர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகளால் ஸ்காந்தபுராணபடனம் செய்யப்பெறுகிறது. வெகு உவமான உபமேயங்களுடன் இனிதாக நடைபெறுவதைச் சிவகுக நேயச் செல்வர்கள் வந்து சிரவணானந்தம் பெறுகின்றனர். ஆவணி கஉ-ல் பார்வதி தேவியார் திருக்கல்யாணமும், கஎ-ல் முருகவேள் திருவவதாரமும், மிக விஸ்தாரமாக நடைபெற்றன. சாஸ்திரியாருக்குப் பட்டாடைகளும், பொற்காசுகளும் பரிசளிக்கலாயிற்று. இதனை நடத்துவிக்கும் மகாசபையார்க்கு மயில்வாகனப்பெருமான் வளம் பல அருள்வாராக!

ஸ்ரீநாரிகணபதிக்கு ஆவணிமாத மகா சதுர்த்தி வைபவம் உபயக்காரரால் நன்கு நடைபெற்றது. வெள்ளிமூஷிகத்தில் திவ்யாபரணாலங்கிருதராய் விநாயகப்பெருமான் திருவுலாப் போந்தருளினர். நடராஜர் அபிடேகம் ஆவணி ககூ-ல் சதுர்த்தசியன்று சிறப்பாக நடைபெற்றது. நீலகண்ட சிவாசாரியார் திருநக்ஷத்திரம், ஆவணி ௩௧-ல் சுக்கிரவாரத்தன்று சிவாலயத்தில் ஆதிசைவமகாசபையினரால் அபிடேக நிவேதன திருவாராதனைகளுடன், பிரசங்கங்களும் திருவுலாவும் செய்து இனிது கொண்டாடப்பெற்றது. ஆவணிமூலம் கஉ-ல் யன்று சுவாமிகள் மண்டபப்படிகொண்டெழுந்தருள விட்டம்பாளையம் மிட்டாதார் சுந்தரக் கவுண்டரால் மிகவிமரிசையாகச் செய்யப்பெற்றது.

தேவி தவநிலை ஆகமமுறையுடன் நடைபெற்றது. இம்மதி ௩௨-ல் பூர்த்தியாகிறது. இருபத்திரண்டாநாளாகிய ௬௨-ல் மகாளய அமாவாசையன்று இடப்பாகம் பெற்று அர்த்தநாரீஸ்வரக்காட்சி நடைபெறும். கொங்கேழு சிவாலயங்களுள் முதன்மையான திருக்கொடிமாடச்செங்குன்றூர் என்னும் இத்திருத்தலத்தில் பூவும் மணமும், கதிரும் ஒளியும் போலச் சத்தியும் சிவமும் சேர்ந்திலங்கும் அர்த்தநாரீஸ்வர சொரூபத்தைச் சிவநேசச் செல்வர்கள் தெரிசித்து இஷ்டசித்திகளைப் பெறுவார்களாக!

**திருத்தென்குடித்திட்டை:**— சிவாலயத் திருமதிலுக்கு, ஆவணி [illegible] கன்யா லக்ன நன்முகூர்த்தத்தில் திருப்பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. ஆவணி ககூ-ல் சதுர்த்தசியன்று நடராஜாபிடேகம் நடைபெற்றது.



**கோனபட்டு:**—புதுக்கோட்டை சட்டசபை அங்கத்தினர்களாக திருமெய்யம் டிவிஷனுக்கு நின்ற மூவரில், விரையாச்சிலை திரு. கயிலாச அம்பலகாரர் அதிகப்படியான ஓட்டுடன் வெற்றிபெற்றார். திரு. சுப. கு. சொக்கலிங்க செட்டியாருக்கு அதிகமாக வெங்களூர் நல்லைய ராவுத்தருக்கு ஒன்பது ஓட்டுகள் கிடைத்திருப்பதாகவும், எலக்ஷன் நடந்தபோது தப்பிதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும், மறுஓட்டுக்குக் கொண்டுவர நல்லைய ராவுத்தர் பேரில் சொக்கலிங்க செட்டியார் நடவடிக்கையெடுத்துக் கொள்வாரெனவும் தெரிகிறது.

**திருஆடுதுறை:**—தேவாரத் திருப்பதிகம் பெற்ற இத் திருத்தல சிவாலயம், கும்பகோணம் தேவத்தானக் கமிட்டியைச் சேர்ந்தது. சூரியனார் கோயிலாதீன கர்த்தரின் நிர்வாகத்திலுள்ளது. இவ்வாலயத்துக்குப் போதிய பூஸ்திதிகளிருப்பதால் எடுபடிகட்கு இடை யிடையே தடையேற்படும் இடையூறுகளைத் தவிர்க்க நிர்வாகஸ்தர் முன்வரவேண்டும்.

**கோவிந்தபுரம்:**—திருவிடைமருதூருக்குக் கிழக்கே யுள்ள பாணபுரம் என்னும் இது, திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி யாலயத்தைச் சேர்ந்த தற்புருஷ ஸ்தலமாகும். சுவாமி பாணபுரீஸ்வரர். தேவி அபிராமி அம்பிகை. போதிய பூஸ்திதியுண்டு. நான்குகால பூசையுடன் ஆலயம் நன்னிலைமையிலிருக்கிறது. சுவாமி கோயில் ஸ்தூபியும், துவஜஸ்தம்பத்தின் மேற்பாகமும் சாய்ந்திருப்பவற்றை நிமிர்த்தியும், அஷ்டபந்தனம் செய்தும் மகாகும்பாபிஷேகம் செய்யவும், திருநந்தனவனத்தைச் சீர்பெறச் செய்யவும் திருவாவடுதுறை யாதீனத்தார் கவனிக்கவேண்டும்.

**திருக்கருகாவூர்:**—திருமுல்லைவனநாத ஸ்வாமி திருக்கோயிலில் உழவாரத் திருப்பணி செய்யவும், தளவரிசைகளும், வாகனங்களும், திருநந்தனவனமும் சீர்திருத்தம் செய்யவும் வேண்டிய தவசியமா யிருப்பதால், தருமகருத்தர்கள் கவனிப்பார்களாக!

**வருணபுரம்:**— மட்டயாந்திடல் என வழங்கும் இவ்வூரில் திரிலோகநாதர் ஆலயம் ஷை திருப்பணிச் செல்வர் காரைக்குடி அ. மு. க. முத்துக்கருப்பன் செட்டியாரால் நன்கு பரிபாலிக்கப்பெறுகிறது. திருநந்தனவனத்தைப் பெரிதாக்கவும், பசுமடம் உண்டுபண்ணவும் வேண்டிய தவசியம்.

**கோயிற் குறைபாடுகள்:**— இத் தலைப்புடன் ஒரு வியாசம் இளையாற்றங்குடிக் கோயிலைக் குறித்ததாய் வந்துளது. ஷை கோயிலுக்குரிய நகரத்தார்கள் கவனத்திற் கொண்டு குறைகளை நிவர்த்திப்பார்கள் என்னும் நம்பிக்கையாலும், புதினத்தாள் இடம் பெறாமையாலும் பிரசுரஞ் செய்யப் பெறவில்லை.

**சித்தாந்தம் உதவிப்பத்திராசிரியரவர்கட்கு:**-ஐயா! சித்தாந்தம் மலர்-6: இதழ்—6: பக்கம்—139 ல் 'நம்நாடும் கல்வியும்' என்ற தலைப்புடன் வெளியான எனது கட்டுரையில், 'சிலகருத்துக்கள் மறுக்கற்பாலன'' எனக் குறிப்பெழுதி யிருக்கிறீர்கள். மறுத்தற்கு உரியவைகளைக் காரணங்களுடன் தெரிவித்தீர்களில்லை. இனியேனும் சித்தாந்தத்தின் மூலமாக எனக்கு அறிவித்தால், அவைகட்குத் தக்க சமாதானம் வரைவேன். காலந் தாழ்க்காது வெளியிடவேண்டும்.

தங்களன்புள்ள
சு. [illegible]ணியன், கோநகர்.

**குன்றக்குடி:**—குன்றுதோறாடும் குமரவேளுறையும் இத்திருத்தலத்தில், திரு. முத்திருளப்ப பண்டாரம் தனது மூதாதைகள் காலத்திலிருந்து பரிபாலித்துவருகிற சித்திவிநாயகாலயத்திற்கும் திருநந்தனவனத்திற்கும் உதவியாக ஒரு பிரைஸ் சீட்டு தொடங்கியிருக்கிறார். சீட்டு ஒன்றுக்கு எட்டணாவீதம் 48000 சீட்டுகள் சேர்த்து 30-10-1933ல் சீட்டு குலுக்கக் கூடுமெனவும், அன்பர்கள் உதவிபுரிந்து பொருள் இலாபத்தையும் புண்ணியப்பேற்றையும் பெறவேண்டுமெனவும் ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

**உய்யக்கொண்டான் சிறுவயல்:**—திருவாளர் சுப. ராம. பழ. இராமநாதன் செட்டியார் புதுவீடு குடிபுகுந்த நன்மைக்காகப் பொன்னழகியம்மனுக்கு ஆவணி ௨௮௳ சிறப்பாகத் திருவுலாச் செய்வித்தனர்.

**ஆவினிப்பட்டி:**—விவேகானந்தர் கல்விக்கழகத்தின் ஏழாம் ஆண்டு மூன்றாம் மாதக்கூட்டம் 4-9-1933 மாலை 4 மணிக்கு பழைய தேசபக்தரும், வழக்கறிஞருமாகிய தூத்துக்குடி திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் தலைமையில் நன்கு நடைபெற்றது. மாணவர் கடவுள் வாழ்த்துக்கூற ஆசிரியர் திரு. வ. மு. இரத்திநேசுவரையர் தலைவரவர்களின் தேசாபிமானத்தையும், மொழிப்பற்றையும் விளக்கி அவர்களைத் தலைமை வகிக்க வேண்டினர். தலைவர் சில நல்லுரை வழங்கியபின், 'பாரிமகளிர்' 'ஞானயோகம்' 'குமரனவதாரம்' என்பனபற்றி மாணவர் திடமாக உரையாடினர். தலைவர் தெய்வபக்தி, தேசத்தொண்டு, மொழிவளர்த்தல் பற்றி உருக்கமான சொற்பொழிவால் யாவரையும் குதூகலிக்கச் செய்தனர். மகாத்மாகாந்தியின் மகிமையையும் தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்தவேண்டிய அவசியத்தையும் திறம்பட விளக்கினர்.

**கட்டுரைப்பரிசு:**—நாட்டரசன்கோட்டை பாரதி வாசகசாலையார் ஏற்படுத்திய 'புத்தகங்களின்பயன்' என்ற கட்டுரைப்பரிசு தங்கமெடலும் திருக்குறளும் ஆவினிப்பட்டி விவேகானந்தர் கல்விக்கழக ஆசிரியர் திரு வ. மு. இரத்திநேசுவரையருக்குக் கிடைத்திருக்கிறது.

**ஸ்பெஷல்ரயில்:**—மைசூர் தசரா வைபவக்காக்ஷிக்கு, காரைக்குடியிலிருந்து மகாலட்சுமி அகில இந்திய யாத்திரா ஸ்பெஷல், இம்மதி ௬ நண்பகலிற் புறப்படுகிறது.

**கரிசூழ்ந்த மங்கலம்:**—ஆனந்தகான சபாவின் பத்தாவதாண்டு தொடக்க விழா, ஆவணி ௬௳ மறைத்திருவாளர் K. A. நாராயணையர் B. A. L. T. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உபந்யாசங்களும் சங்கீதக்கச்சேரிகளும் நிகழ்ந்தன எனவும், பத்தாவது ஆண்டுத் தொடக்க விழாவில் முதலாவதாகச் சிவநேசனை வரவேற்று, உண்மை யறிவானந்த உருவினராகிய சிவபெருமானின் திருவருளால் சிறந்தோங்கப் பிரார்த்தித்ததாகவும், 'சிவநேசன்' ஆண்டு—௭: திங்கள்—௧: பக்கம் 16—ல் கரிவலம்வந்தநல்லூர் ஆனந்தகானசபையார் என்பதை, கரிசூழ்ந்த மங்கலம் ஆனந்தகானசபையார்' எனத்திருத்திக் கொள்ளவும், ஷை சபைஸ்தாபகர் மறைத்திருவாளர் T. K. அரிகரபுத்திரசர்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

---

உ

# செய்தித்திரட்டு.

**சைகோன் நகரத்தார் தீர்மானங்கள்:**—ஏற்கனவே பத்திரிகைகளின் வாயிலாக தெரிவித்திருந்த பிரகாரம் நாளது ஆவணித் திங்கள் 4, பிற நாட்களில் கூடிய பொதுக்கூட்டத்திற்கு இப்பகுதியிலுள்ள சகலநாட்டின் நகரத்தார்களும் வந்திருந்து செய்துகொண்ட தீர்மானங்களாவன:—

1. நாளது ஆவணித்திங்கட்குள் தொகை கொடுப்பதாகச் சொல்லிக் கேட்டுக் கொண்டவர்கள் அவ்வாறே தொகைகளைக் கொடுத்து வருகிறது.

நாளது புரட்டாசித் திங்கள் முதலாக இரண்டாண்டுகள்வரை ஒழுங்காகத் தொகைகளைக் கொடுத்து வருபவர்களிடமும் கணக்குகளைக் கமிட்டியில் கொண்டுவந்து காண்பித்தவர்களிடமும் பொறுமதியாக விருந்துவாங்கிக் கொள்கிறது. கமிட்டியில் கணக்குகளைக் கொண்டு வந்து காண்பித்தவர்கள் 90 நாளைக்கு ஓர் முறை ஐந்தொகையுடன் கணக்குகளைக் கொண்டுவந்து காண்பித்து, சேருகிற தொகைகளைக் கடன் கொடுக்கவேண்டியதொகை அசல்வட்டிகூடக் கூடியவைகட்கு ஈவுப்பிரகாரம் பிரித்துக் கொடுத்துவருகிறது.

2. பனிரண்டு திங்கள் நிரவல் $5\frac{1}{4}$ பர்சண்ட் வட்டியை அடிப்படையாகக் கொண்டு மாதாமாதம் வட்டி பேசிவருகிறது.

3. தவணைப்பணங்கட்கும் தனது மாறற் பணங்கட்கும் நாளது ஆவணித் திங்கள் நான்காம் நாள் முதற்கொண்டு வியன்வட்டி யன்னியில் உள்ளூர்க் கடைகளிலும், நாட்டுப்புறத்துக் கடைகளிலும் நடப்பு வட்டியின் பிரகாரம் வாங்கிக் கொள்ளுகிறது.

ஏற்கனவே கணக்குப் பரிசோதனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட நால்வர் கொண்ட கமிட்டி அங்கத்தினர்களில் ஒருவராகிய திரு. நா. மா. முத்தையா செட்டியார் தாய்நாடு செல்வதை முன்னிட்டு அன்னவருக்குப் பதிலாக திரு. சுப. அ. சித. அளகப்பசெட்டியாரை நியமித்திருக்கிறது.

4. இந் நாட்டிலுள்ளவர்கள் கடன் கொடுக்க வேண்டுவது அதிகமிருப்பதை முன்னிட்டு இந்நாட்டிலோ வேறு தாய் நாட்டிலோ தங்கள் தங்களின் சொத்துக்களையும், தாங்கள் கடன் கொடுத்து வைத்திருக்கும் இனங்களையும் பிறரொருவர் பெயருக்குப் பிரகடனம் செய்து வைத்திருப்பார்களேயாமாகில் அவைகளைக் கணக்குப் பரிசோதனைசெய்வதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியிலுள்ள நால்வர் திரும்ப அவரவர்கள் பெயருக்கு மாற்றிக் கொள்ளச் செய்கிறது.

(நகரத்தார்கள்.)

**சினிமா பார்க்கக் கூடாது. ஏன்?:**—வில்லியம் ப்ரிஸ்டல் என்ற ஓர் ஆங்கிலவாலிபன் கடைகளிலும் இதர இடங்களிலும் திருடித் திருடி ஒருதரம் கைதியாக்கப்பட்டு விசாரணை செய்யப்படும்பொழுது அவனுடைய பந்துக்கள் கோர்ட்டார் முன்னிலையில் 'ஸினிமாவே அவனைக் கெடுத்தது.' என்று சாக்ஷியம் கொடுத்தனர். மாஜிஸ்திரேட்டு அவர்கள் இரண்டு வருஷகாலம் வில்லியம் ஸினிமா பார்க்கக் கூடாது என்று தீர்மானித்தாராம்.